நம்நாடு

The 'Nam Nadu' A Tamil Daily. விலை
The Official Organ of the D. M. K. 12 காசு

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

பதிவு எண் : எம். 6311 ★ சென்னை : திருவள்ளுவராண்டு 1998 சித்திரை 4 (17—4—67) திங்கள் ★ நிறுவியது : 1953
மலர் 14—இதழ் 256 ★ வெளியூர் : திருவள்ளுவராண்டு 1998 சித்திரை 5 (18—4—67) செவ்வாய் ★ தொலைபேசி: 51331

தேர்தல்படிப்பினையைஉணராவிடில்!

காங்கிரசின் எதிர்காலம் மேலும் இருள்மயமாகும்!

மதுரைக் கூட்டத்தில் முதலமைச்சர் அண்ணா முழக்கம்

மதுரை, ஏப். 17—

"காங்கிரசல்லாத ஏனைய மாநில அரசாங்க நிர்வாகத்தில் மத்திய அரசாங்கம் தலையிடாது என்று நாம் நம்பிக்கொண்டிருக்கிறோம்.

"இன்றையத்தினம் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சிக்கு எதிர்க் கட்சிகள் மட்டும் காரணமல்ல; மக்கள், காங்கிரசுக் கட்சிக்கு எதிராகக் கொண்டிருக்கும் கோபமே காரணம். தேர்தல் முடிவுகளின் படிப்பினைகளைக் காங்கிரசுக் கட்சி உணராவிட்டால், இப்பொழுது காங்கிரசுக் கட்சி ஆட்சி செய்துவரும் மாநிலங்களிலும் அதன் எதிர்காலம் இருள் நிரம்பியதாகிவிடும்!

"நான்காவது பொதுத் தேர்தலில், சாதி அடிப்படையில் போட்டிகள் நிறைய இருக்கும் என நினைத்தேன்; ஆனால், தேர்தல் முடிவுகள் அதைப் பொய்த்துவிட்டது. மக்கள், 'சாதி வேறு—அரசியல் வேறு' என்பதைத் தெளிவாகக் காட்டிவிட்டனர்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள் மதுரையில் நடைபெற்ற பாராட்டுவிழாக் கூட்டத்தில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் தெள்ளத்தெளிய விளக்கினார்கள்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள்—நாடாளுமன்ற தி. மு. க. உறுப்பினர்கள் அனைவருக்கும் அளிக்கப்பட்ட பாராட்டுக் கூட்டத்தில் கலந்துகொண்டு அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"நகரங்களில் மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவு உள்ளது என்று நினைத்திருந்தேன்.

ஆனால் தேர்தல் முடிவுகள், கிராமங்களிலும் கழகத்துக்கு நல்ல ஆதரவு உள்ளன என்பதை உணர்த்திவிட்டன. தமிழகம் முழுவதும் பரவலாக திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றுளது.

காங்கிரசுக் கட்சியிலுள்ள உட்பூசல் சண்டைகளும் போட்டிகளும் தவிர்க்கப்படாவிட்டால், காங்கிரசு ஆட்சி செலுத்திவரும் மத்திய அரசாங்கம் சில மாதங்களில் பெரிய அபாயத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும்!"

பஞ்சாபில் காங்கிரசு கரைகிறது!

400-க்கும் அதிகமான முக்கிய தலைவர்கள் விலகுகின்றனர்!

லூதியானா, ஏப். 7—

காங்கிரசுக் கட்சிக்குப் பஞ்சாப் மாநிலத்தில் பரிதாபத் துக்குரிய சீர்குலைவு ஏற்பட்டிருக்கிறது!

முன்னாள் காங்கிரசு அமைச்சர் இயானி கர்தார் சிங் உட்பட முக்கிய காங்கிரசுத் தலைவர்கள் காங்கிரசுக் கட்சியிலிருந்து விலகியுள்ளனர்!

400-க்கும் அதிகமான காங்கிரசு உறுப்பினர்கள் சாந்த் அகாலி தளத்தில் சேர்ந்துள்ளனர்!

காந்தீயம் அரசியல் முழக்கமல்ல!

காந்தி பொருட்காட்சியில் நடைபெற்ற வைபவத்தில் பேசுகையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"காந்தீயம் அரசியல் முழக்கமல்ல; காந்தீயம் என்பது ஒரு தத்துவமாகும்; அது அரசியலுக்கு அப்பாற்பட்டதாகும். காங்கிரசுக் கட்சிக்கு வெளியே உள்ளவர்களும் காந்தீயத்தைக் கடைபிடிக்கிறார்கள்!

"சர்க்கார் நிர்வாகத் திறமையுடன் பணியாற்ற உங்கள் [illegible] ஒத்துழைப்பையும் தருமபடி கேட்டுக்கொள்கிறேன்."

2,078 துப்பாக்கிப் பிரயோகங்கள்!

சுதந்தரத்துக்குப் பிறகு இந்தியாவில் நடந்தது!

இந்தியா சுதந்தரமடைந்த பிறகு இதுவரை 2,078 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றுள்ளன.

மொத்தம் நடைபெற்ற 2078 துப்பாக்கிப் பிரயோகங்களைக் கணக்கிட்டால் மாதந்தில் சராசரியாக 9 துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றுள்ளன.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களினால் இறந்துபோனவர்கள் என்று அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை மட்டும் 1,875; காயமடைந்தோர் எண்ணிக்கை 4,984.

இறந்துபோனவர்கள், காயமடைந்தவர்கள் குடும்பங்களுக்கு உதவித் தொகையாக ரூ. 5.56 [illegible] கப்பட்டிருக்கிறது.

சிவசேனா வெறியாட்டம்

பம்பாய், ஏப். 17—

வடக்கு பம்பாயில் சியோன்—சாம்பூர் சாலையிலுள்ள தென்னக மக்களின் முடிதிருத்தும் நிலையம் ஒன்றும், உணவு விடுதி ஒன்றும் மராட்டிய வெறியர்களின் அமைப்பான 'சிவசேனா'வால் தாக்கப்பட்டன.

முடிதிருத்தகம், உணவு விடுதிகளிலுள்ள உடைமைகள் தீ வைக்கப்பட்டுக் கொளுத்தப்பட்டன!

25 பேர் அடங்கிய சிவசேனா வெறியர்கள் கூட்டம் 15-4-67 அன்று இரவு 10-மணிக்குமேல் இந்த அராசக வேலையில் ஈடுபட்டது.

முருகேஷ், சுப்பையா என்ற இருவருக்கும் உரிமையான முடித்திருத்தகம் தாக்கப்பட்டது. இதனால் ரூ. 1,000-க்கு மேல் இழப்பு ஏற்பட்டது.

[illegible] 'தென் கன்னட இந்து [illegible]' ஒன்றையும் அந்த [illegible]ர்கள் தாக்கினர்.

[illegible]வு விடுதியில் ஏற்பட்ட [illegible] சேதம் மட்டும் ரூ. [illegible]00-க்குமேல் ஆகும்.

மதுரையில் அண்ணாவுக்கு வரவேற்பு

மக்களின் மகிழ்ச்சி வெள்ளம்

மதுரை, ஏப். 17—

மதுரையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் கலந்துகொண்ட ஊர்வலம் வரலாற்றுச் சிறப்புமிக்கதாக அமைந்திருந்தது.

மதுரை கீழ்ச்சந்தைப்பேட்டையிலிருந்து புறப்பட்ட ஊர்வலம், நான்கு வீதிகள் வழியாகச் சென்றதும் சாலையின் இருபுறங்களிலும் இலட்சக்கணக்கான மக்கள் குழுமியிருந்து அண்ணா அவர்களை வரவேற்றனர். வழியெல்லாம் வரவேற்பு வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன. மாடிகளிலிருந்து மக்கள் மலர்மாரி பொழிந்தனர்.

ஊர்வலத்தில், 10,000-க்கு மேற்பட்ட சைக்கிள்கள் கலந்துகொண்டன; 100 கார்களும் வந்தன.

இந்த ஊர்வலத்தில், மதுரை மாவட்டத்தில் வெற்றி பெற்ற கழக சட்டமன்ற — நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு மதுரையில் பிரும்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.

அண்ணா அவர்களின் வருகையை முன்னிட்டு மதுரை நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது!

எங்கு பார்த்தாலும் தோரணங்களும் வளைவுகளுமாக நகரம் காட்சி அளித்தது. கழகக் கொடிகள் நகர முழுவதும் பட்டொளி வீசிப் பறந்தன!

முதலமைச்சர் அண்ணா அவர்கள் திருச்சியிலிருந்து வந்தவுடன் மதுரை கலெக்டர் சேஷன், மதுரை நகராட்சிமன்றத் தலைவர் இராமகிருஷ்ணன், மற்றும் காவல்துறை அதிகாரிகள் வரவேற்றனர்.

ஏராளமான கழகத் தோழர்களும் கூடியிருந்து வரவேற்றனர்.

அண்ணா அவர்கள் மதுரை நகரில் கலந்துகொண்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

பொருட்காட்சி திறப்பு விழாவில் கலந்துகொண்ட அண்ணா அவர்களுக்கு அலங்கரிக்கப்பட்டிருந்த யானை மாலை சூட்டி வரவேற்றது.

விழா முடிந்தபோது யானை வணக்கம் செலுத்தி அண்ணாவை வழியனுப்பிவைத்தது.

குடியரசுத் தலைவர் இராதாகிருஷ்ணன் அவர்கள் சென்னைக்கு வருகை தந்தபோது தமிழக முதல்வர் சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வரவேற்ற காட்சி.

தூதுவர் பதவி ஏற்றுக்கொள்ள சசின் சௌத்ரி மறுப்பு

புதுடில்லி ஏப். 18

இந்தியத் தூதுவராக இங்லாந்து நாட்டில் பணியாற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட முன்னாள் நிதியமைச்சர் சசின் சௌத்ரி, தமக்கு அந்தப் பதவியை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லை என்று தெரிவித்துள்ளார்.

'காபினெட்' (அமைச்சர்) மதிப்புடன் சசின் சௌத்ரிக்கு அந்தப் பதவி தரப்பட்டது. சொந்தக் காரணங்களினால் தாம் தூதுவர் பதவியை ஏற்க விரும்பவில்லை என்று கூறியுள்ளார்.

விஜயலட்சுமி பண்டிட்டுக்கு தூதுவர் பதவி

இலண்டனில் இந்தியத் தூதுவராகப் பணியாற்ற யாரை நியமிப்பது என்று டில்லியில் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

தூதுவர் பதவி நியமனம் பெற ஆலோசிக்கப்படும் பெயர்களில் விஜயலட்சுமி பண்டிட் பெயரும் ஒன்றாகும்.

விளக்கேற்றி வைக்கிறார் அண்ணா

'தமிழக அரசு தலைமைச் செயலகம்'—பெயர்ப் பலகைக்கு முதலமைச்சர் அண்ணா விரலழுத்தி ஒளி கூட்டும் திருக்காட்சி!

மக்கள் விரும்பும் சட்டங்களையே தமிழக அரசு இயற்றும்

மதுரை நீதிமன்றக் கட்டிட கால்கோள் விழாவில் முதலமைச்சர் அண்ணா விளக்கம்

மதுரை, ஏப். 17—

"நிர்வாகம் என்பது வேறு—நீதித்துறை என்பது வேறு; இந்த வேறுபாட்டைத் தமிழக அரசாங்கம் உறுதியாகக் கடைபிடிக்கும்.

"நீதிமன்றங்கள் வளைந்து கொடுத்து அரசாங்கத்தையே பின்பற்ற வேண்டும் என்று புதிய அரசு விரும்பவில்லை. மக்களின் விருப்பத்திற்கேற்ற புதிய சட்டங்களையே இயற்ற அரசாங்கம் விரும்புகிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், மதுரை—இராமநாதபுரம் மாவட்டங்களின் நீதிமன்றங்களின் கட்டிடத்துக்கான அடிக்கல் நாட்டு விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

மதுரை—இராமநாதபுரம் மாவட்டங்களின் நீதிமன்றங்களுக்காகப் புதிய கட்டிடம் கட்டப்படுமிடம் மதுரை நகரிலிருந்து மூன்றுமைல் தொலைவில் உள்ள செங்குளம் என்ற பகுதியில் உள்ளது.

நீதிமன்றக் கட்டிடங்களுக்கான அடிக்கல் நாட்டி அண்ணா பேசியதாவது:—

"மக்களின் விருப்பங்களை அறிந்து சட்டங்கள் இயற்றப்படும்பொழுது அந்தச் சட்டங்களை, 'மக்களின் சட்டங்கள்' என்று கூறலாம்.

"சட்டங்கள் எந்த நிலைமையில் எந்தக் கண்ணோட்டத்துடன் சட்டமன்றத்தில் இயற்றப்பட்டன என்பதை மனதில்கொண்டு நீதிமன்றங்கள் விளக்கம் தரலாம்.

"இங்கே, பேசிய உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி, மாநில அரசாங்கங்களுக்கும் — தனி நபர்களுக்குமிடையே எழும் வழக்குகளில் விளைவாக நுண்ணியமான நிலைமையில் தீர்வு காணவும், இரண்டுக்கும் நீதி வழங்கக்கூடிய நிலையிலும் நீதிமன்றங்கள் இருப்பதாகத் தெரிவித்தார்கள்.

"மாறிவரும் உலகில் மாநிலங்களுக்கும்—மத்திய அரசுக்கு மிடையேகூடத் தகராறுகள் ஏற்படலாம்; இவைகளில் நீதிமன்றங்கள் தலையிட்டு, தங்க[illegible]

எது விளக்கங்களைத் தரவேண்டிய நிலையும் எழலாம்.

"இப்பொழுது திருமலைநாயக்கன் மகாலில் நீதிமன்றங்கள் உள்ளன. அந்த இடங்கள் பாதுகாப்புக் குறைவாக இருப்பதால் புதிய இடத்தில் நீதிமன்றங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணருகிறோம்.

"புதிய கட்டிடங்கள் இரண்டொரு ஆண்டுகளுக்குள் கட்டப்பட்டுவிடுமென்று நம்புகிறேன்."

சென்னை நகர ரேஷன் வியாபாரிகள் சங்க ஆண்டு விழா

முதலமைச்சர் அண்ணா கலந்துகொள்வார்

சென்னை நகர ரேஷன் வியாபாரிகள் மத்திய கமிட்டியின் முதலாண்டு விழா, 18—4—67 மாலை 5 மணிக்கு சென்னை மெமோரியல் மண்டபத்தில் நடைபெறும்; திரு. பி. ஏ. என். இராசரத்தினம் தலைமைவகிப்பார்; முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவுரை வழங்குவார்: திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., மற்றும் பலர் பேசுவர்.

திருவனந்தபுரத்தில் அண்ணா-நம்பூதிரிபாடு சந்திப்பு

கோவை, ஏப். 17—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களும் கேரள முதலமைச்சர் ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாடு அவர்களும் மே மாதத்தில் கேரளத் தலைநகரான திருவனந்தபுரத்தில் சந்தித்துப் பேச இருக்கிறார்கள்.

இத்தகவலை, கோவை நகராட்சி அளித்த வரவேற்பின்போது உணவமைச்சர் கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

"இரு மாநிலங்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் குறித்து அவர்கள் பேசுவார்கள். கோவை நகருக்கு சிறுவாணி ஆற்றுநீரை குடிதண்ணீருக்காக கொண்டுவர கேரளத்தில் ரூ. 16 கோடி செலவில் அணை கட்டுவதற்கான திட்டத்திற்குக் கேரள அரசின் அனுமதியையும் முதலமைச்சர் அண்ணா கோருவார்" என்று கே. ஏ. மதியழகன் தெரிவித்தார்.

[illegible]த் துணிகள் ஏற்றுமதி

[illegible]ச்சர் அண்ணா வலியுறுத்தல்

காஞ்சிபுரம், ஏப். 18—

"[illegible]ரசாங்கம் கைத்தறித் துணிகளை வெளி[illegible] ஏற்றுமதி செய்வதில் மிகுந்த அக்கறை [illegible]ள்ள வேண்டும். மத்திய அரசு தக்க [illegible]ம் அளித்தால், நானே அயல்நாடு சென்று கைத்தறி துணிகள் விற்பனைக்[illegible] வழிவகைகளை காண்பேன்"

என்[illegible] காஞ்சிபுரம் கைத்தறி வார விழாவில் கலந்துகொண்டு பேசு[illegible]யில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறினார்கள். மேலு[illegible]ம் அவர் குறிப்பிட்டதாவது:—

[illegible] கைத்தறித் துணிகள் [illegible]ான அளவில் தேங்[illegible]கும் நிலை ஏற்பட்டுள்[illegible]த்திறிலை மாற்றப்படுமால் [illegible] கைத்தறி நெசவாளர் [illegible] வாழ்வு உண்டு. [illegible]னால் பொதுமக்கள், [illegible]த் துணிகளை வாங்க [illegible]

[illegible]ல உணர்வினால் உற்[illegible]த்திசெய்யப்பட்டிருக்கிறது.

[illegible] நெசவில் ஈடுபட்டிருக்[illegible] நெசவாளர்களுக்கு [illegible]ப் பட்டின் விலை [illegible]றக்க கருநாடக [illegible] கேட்டுக்கொள்ள [illegible] நெசவாளர்களின் [illegible]தர தொழில் [illegible] பெறவேண்[illegible]

[illegible]க்குகளில் [illegible] குழந் [illegible] மலை நேர [illegible]ருப்ப[illegible] ஏற்பாடு செய்யலாம்."

கோவை நகராட்சியில் அமைச்சர்கட்கு வரவேற்பு

கோவை, ஏப். 17—

தமிழக உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா, உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துசாமி ஆகிய மூவருக்கும் காங்கிரசுக் கட்சியினர் பெரும்பான்மையாக உள்ள கோவை நகராட்சி வரவேற்பு அளித்தது.

நகராட்சி அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசிய அமைச்சர்கள், நகராட்சி மன்றங்களின் அதிகாரமும் வருமானமும் எப்படி பெருக்கப்படவேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்கள்.

"அரசாங்கத்தின் நிதி வசதி பெருக்கப்பட்டால் நகராட்சிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்" என்று உறுதி கூறினார்கள்.

தமிழக அரசின்மீது பெருஞ்சுமை!

மத்திய அரசுக்கு இவ்வாண்டு ரூ. 22 கோடி வட்டி தரவேண்டும்

காஞ்சியில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா தெளிவுரை

காஞ்சிபுரம், ஏப். 17—

தமிழக அரசுமீது பெரும் பளு சுமத்தப்பட்டிருக்கிறது; இந்த ஆண்டில் மத்திய அரசுக்கு வட்டியாக மட்டும் நாம் ரூ. 22 கோடி தரவேண்டும்; ரூ. 13 கோடி கடன்களைத் திருப்பித் தரவேண்டும்; இந்த நிலையில், தமிழக அரசுக்கு மக்களுடைய முழுமையான ஒத்துழைப்பு தேவை"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், காஞ்சி தெருக்களுக்கும் போடப்பட்டுள்ள குழாய் மின்விளக்குகளை, 15—4—67 அன்று ஏற்றிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:—

"உணவுதான் இன்று முக்கியமான பிரச்சினை; இது குறித்து அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. உணவுப் பிரச்சினைகள் தீர்ந்தால், பிற பிரச்சினைகளை எளிதில் தீர்த்து விடலாம்.

"நம் நாட்டிலே உள்ள ஏராளமான எளிய குடிலகளில் உள்ள ஏழ்மை எனும் இருளும் அகற்றப்பட வேண்டும். மன நிறைவும், மகிழ்ச்சியும் ஏழைகளுக்கு ஏற்படுமாயின் வாழ்வைக் கவ்வியுள்ள இருளும் அகலும்! அந்தப் பணியில் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

'நான் முதலமைச்சராகிக் காஞ்சிக்கும் பெருமை சேர்ந்தேன் என்பது தவறு; நான் பிறப்பதற்கு வெகுகாலத்துக்கு முன்பே காஞ்சி, பெருமையும் ஏற்றமும் பெற்று விளங்கியது!'

காஞ்சி--மாவட்டத் தலைநகரமாகுமா?

டாக்டர் சீனிவாசன் பூங்காவில் நீர் வழங்கும் தேக்கத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்ததாவது:—

"காஞ்சியை மாவட்டத்தின் புதிய தலைநகராக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும்."

கட்டிடத் திறப்பு விழாக்கள்

காஞ்சியில் சேவா சமாஜத்தின் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்த அண்ணா, சிறுகாவிரிபாக்கத்தில் ஒரு பள்ளிக் கட்டிடத்தையும், ஒரு நீர்த்தொட்டியையும் திறந்துவைத்தார்கள்.

குடியரசுத் [illegible]வர் பதவி

17 வேட்பாளர்கள் போட்டி!

புதுடில்லி, ஏப். 18—

இந்தியத் துணைக்கண்டக் [illegible]த் குடியரசுத் தலைவர் பதவிக்கான தேர்தலில், காங்கிரசுக் கட்சியின் சார்பில் ஜாகிர் உசேன், எதிர்க் கட்சிகளின் சார்பில் கே. சுப்பாராவ் உட்பட 17 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

குடியரசுத் தலைவர் பதவிக்காக 20 வேட்பாளர்களுக்காக 30 வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மூன்று வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன; எனவே, 17 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகிறார்கள்.

போட்டியிலிருந்து வேட்பாளர்கள் விலகிக்கொள்ளக் கடைசி நாள் ஏப்ரல் 18-ம் நாள்.

துணைக் குடியரசுத் தலைவர்

துணைக் குடியரசுத் தலைவர் பதவிக்காக இரு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

வி. வி. கிரி, பேராசிரியர் முகமது ஹபீப் ஆகிய இருவரும் துணைக் குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

புத்தியைத் தீட்டுங்கள்!

காங்கிரசுக்காரர்[illegible] மொரார்ஜி அறிவு[illegible]

"'காங்கிரசுக் கட்சியைவிட எதிர்க் கட்சிகள் [illegible]மானவை' என்ற எண்ணம், தேர்தலில் காங்கிரசுக்கு ஏற்பட்ட தோல்விகளால் முறியடிக்கப்பட்டுவிட்டது!

"காங்கிரசுக் கட்சியிடம் நல்லெண்ணம் இருக்கிறது! ஆனால் காங்கிரசுக்காரர்கள் பற்றி மக்களிடையே நல்லெண்ணம் இல்லை! காங்கிரசுக் கட்சி யாரை நிறுத்தினாலும் அவருக்கு மக்கள் வாக்களிக்கும் காலம் மலையேறிவிட்டது!

"காங்கிரசுக்காரர்கள் தங்களுக்குள் சண்டை போட்டுக்கொள்வதை நிறுத்திக்கொள்ள வேண்டும்! பொதுத் தேர்தலில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய காங்கிரசுக் கட்சியின் அடிப்படைச் சிந்தனையில் மாறுதல் தேவை!

"நேற்றுகூட, மேற்சனா மாவட்டத்தில் காங்கிரசுக்காரர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் கோஷ்டிச் சண்டையைத் தீர்க்க முயற்சி செய்தேன்; ஆனால் எனக்குத் தோல்விதான் ஏற்பட்டது!

"காங்கிரசுக்காரர்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும்; உட்பூசல்களைத் தொலைக்க வேண்டும். காங்கிரசுக்காரர்கள் தங்களை மாற்றிக்கொள்ளாவிட்டால்—காங்கிரசின் மனப்பான்மை மாறாவிட்டால்—மக்கள் ஒருநாள், காங்கிரசாரைக் கல்லால்தான் அடிப்பார்கள்!"

—(நாடியட் நகரில்)

★ தமிழ் வேறு இனத்தின் தாய்மொழியாக இருந்தால் உலகப் பொதுமொழியாக மாறியிருக்கும்! ★ வெளவால் மனப்பான்மையிலிருந்து நாம் விலகவேண்டும்! ★ 'தமிழில் இல்லாதது இல்லை' என்ற நிலையை உருவாக்குவோம்! ★ ஒரு பெரிய நாட்டின் அரசு குற்றமற்றதாக இருக்க வேண்டும்! ★ தாய்மொழிக்கு ஆபத்து என்றால் கொதித்தெழுவது மனித இயற்கை!

'தமிழ் வளர்ந்த அளவுக்குத் தமிழர்கள் வளர வேண்டும்'

தாய்மொழிப்பற்று இயற்கையானது — நியாயமானது

தமிழ் வெளியீட்டுக் கழக நூல்களை வெளியிட்டு முதலமைச்சர் அறிஞர் அண்ணா பேருரை

சென்னை, ஏப். 15—

"உயர்தனிச் செம்மொழியான தமிழ், நமது தாய்மொழியாகும்; உலகில் வேறு எந்த இனத்தாருக்காவது தமிழ் தாய்மொழியாக அமைந்திருந்தால், இத்தனைக் காலத்திற்குள் அது உலகப் பொது மொழியாகவே விளங்கியிருக்கும்.

"ஷேக்ஸ்பியர், 'சீசருடைய மனைவியாகக்கூடியவள் குற்றங்குறைகளுக்கு அப்பாற்பட்டவளாக இருக்க வேண்டும்' என்று சொன்னதுபோல், பெரிய அரசை நடத்திச்செல்பவர்கள் எந்தவிதக் குற்றச்சாட்டுக்கும் இலக்காகாதவர்களாக—எந்தவிதமான குற்றங் குறைகளுக்கும் அப்பாற்பட்டவர்களாக — எல்லா மொழிகளையும் ஒரே மாதிரியாக மதிப்பவர்களாக இருக்க வேண்டும்.

"பன்னெடுங்காலமாகப் புலவர்கள் தேக்கித் தேக்கி அளித்த அறிவுச் செல்வம் நமக்கு உண்டு.

"'தமிழ் வளர்ச்சி' என்று நாம் சொல்வதெல்லாம் 'தமிழ் வளர வேண்டும்' என்று அல்ல! தமிழ், முன்பே தேவையான அளவுக்கு வளர்ந்திருக்கிறது. 'தமிழ் வளர்ச்சி' என்று நாம் சொல்லுவது, தமிழர்களின் வளர்ச்சியைப்பற்றித்தான்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழ் வளர்ச்சிக் கழக நூல்களை வெளியிட்டு உரையாற்றுகையில் கூறினார்கள்.

தமிழ் வெளியீட்டுக் கழகத்தின் நூல் வெளியீட்டு விழா புத்தாண்டு நாளன்று ராஜாஜி மன்றத்தில் நடைபெற்றது. [illegible] நூல்களை வெளியிட்டு முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசியதாவது:—

"தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ள 22 நூல்களை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சியடைந்தாலும், இந்த நூல்களில் எதையாவது ஒன்றினை நான் எழுதியிருந்தால் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

'நூலை வெளியிடுபவன்' என்ற முறையில் இந்த விழாவில் பங்கேற்றதைவிட, 'எழுதியவன்' என்ற முறையில் வந்திருந்தால் மேலும் நான் பெருமிதம் அடைவேன்.

இந்த நூற்களை எழுதிய நூலாசிரியர்களின் பணியினைப் பாராட்டுகிறேன்; என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழ் வளர்ச்சிக் கழகம்' என்றும், 'தமிழ் வெளியீட்டுக் கழகம்' என்றும் நாம் வைத்துக் கொண்டிருப்பதெல்லாம், 'தமிழ் வளர வேண்டும்' என்பதால் அல்ல—தமிழ் வளர்ந்துதான் உள்ளது—'தமிழன் வளர வேண்டும்' என்பதைத்தான் 'தமிழ் வளர்ச்சி அடையவேண்டும்' என்கிறோம்! அதாவது 'தமிழ் வளர்ந்த அளவுக்குத் தமிழன் வளரவேண்டும்' என்கிறோம்.

தமிழ் வெளியீட்டுக் கழகம் தனது பணியினைச் சீரிய முறையில் செய்து வருகிறது. வலிவும், பொலிவும் [illegible] தமிழின் சிறப்பு [illegible] உயர்வை [illegible] சமாக [illegible] தமிழ், [illegible] மொழி; இது, [illegible] எந்த இனத் [illegible] தாய்மொழியாக இருந்திருந்தால், இத்தனைக் காலத்துக்குள் உலகப் பொது மொழியாகி இருக்கும்.

'நம்முடைய தாய் மொழி உயர்வானது' என்ற நினைப்பு—உடனே அந்த நினைப்பினால் ஆபத்து வருமா என்ற ஐயப்பாடு ஏற்பட்டு—'தமிழால் நாம் வளர முடியும்' என்று நம்பி—தாய் மொழிமீது பற்று வைத்திருக்கிறோம்.

தாய் மொழிமீது நாம் பற்று வைத்திருப்பது இயற்கையானது! தாய்மொழிக்கு ஏற்படும் ஏற்றம் நமக்கு ஏற்படும் ஏற்றமாகும்!

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் சொன்னார்கள்—'தாய் மொழிப்பற்று கடவுள் தன்மைக்கு ஈடானது; அதனால்தான், நம் மொழிக்குக் கேடுதல் ஏற்படும் என்று ஐயம்பட்டாலே **கொதித்து எழுகிறோம்' என்று!**

நமக்கு அது மாதிரியான உணர்வு இருப்பது இயற்கையும் கூட!

[illegible] கும் இரண்டு பேர், அவர்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டு நம்மைப் பார்த்துச் சிரித்தாலே, நமக்கு எரிச்சல் ஏற்படுகிறது—கோபம் வருகிறது!

அந்த இரண்டுபேரும் உண்மையிலேயே நமக்குச் சம்பந்தமில்லாததைப் பேசிக்கொண்டிருந்தாலும் நம்மைப் பார்த்துச் சிரித்தவுடன் கோபமடைகிறோம்.

பிற மொழிக்காரர்கள் கூடிக்கூடிப் பேசும்பொழுது, 'நமது தாய் மொழிக்கு ஆபத்து' என்று ஐயப்பாடு எழுவது இயற்கை!

பல மொழிகளைக் கொண்ட நமது நாட்டில், 'ஒரு மொழிக்கு மட்டும் ஏற்றம்' என்ற நிலை ஏற்படுமானால், கோபம் ஏற்படுவதில் வியப்பில்லை!

ஷேக்ஸ்பியர், சீசரின் மனைவியைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'சீசரின் மனைவி குற்றங்குறைகளுக்கு அப்பாற்பட்டவளாக இருக்கவேண்டும்' என்று கூறியுள்ளார்.

அதுபோல், பெரிய அரசை நடத்திச் செல்பவர்களும் எந்தவிதமான குறைகளுக்கும் அப்பாற்பட்டவர்களாக இருக்க வேண்டும்; ஒரு மொழிக்கு மட்டும் சலுகை காட்டுபவர்களாக இருக்கக் கூடாது!

இங்கே மத்திய அரசின் கல்வியமைச்சர் திரிகுண சென் அவர்கள் வந்திருக்கிறார்கள்; அவர்களிடம் தெரிவித்துக் கொள்வேன்—

"தமிழகத்தில், தமிழ் வளர்ச்சிக் கழகம் நூல்களை வெளியிட்டால் மட்டும் போதாது; ஆண்டுக்கு ஒரு முறையாவது தமிழ் வளர்ச்சிக் கழக நூல்களை புதுடில்லியிலும் வெளியிட வேண்டும்" என்று!

சில நாட்களுக்கு முன்பு நான் டில்லியில் இருந்தபோது, உள்துறை அமைச்சர் சவானைச் சந்தித்தேன்; அவர், நான் மகிழ்ச்சியடைவேன் என்பதற்காகவோ என்னவோ—'ஆங்கிலம் நீடிக்க வகை செய்யக் கொண்டு வரப்படவிருக்கும் சட்டத்தில், 'இந்தி, மற்ற மொழிகளின் வளர்ச்சிக்கும் வகை செய்வதைப் பற்றியும் குறிப்பிடப்படும்' என்றார்.

'மற்ற மொழிகள்' என்று குறிப்பிட்டிருப்பதால், நான் மகிழ்ச்சியடைவேன் என்று அவர் கருதியிருக்கிறார்.

நான் சொன்னேன்—'இந்தியும் மற்ற மொழிகளும் என்று குறிப்பிடுவதே இந்திக்கு ஏதோ சலுகை காட்டுவதாகவே இருக்கிறது; எல்லாத் தேசிய மொழிகளுக்கும் சலுகை காட்டுவ[illegible]

தாக இருக்க வேண்டும்' என்று.

பிறகுதான், அதைப் பரிசீலிப்பதாக சவான் தெரிவித்தார்.

'இந்தியும் இதர மொழிகளும்' என்று 'உம்' போட்டிருப்பது, சிறப்புடைமையாக இருக்கலாம்.

'இந்தி, வளர்ச்சி அடைய வேண்டிய மொழி' என்பதைக் காட்டுவதற்காககூட இருக்கலாம்.

தமிழின் வளர்ச்சி, இன்று நேற்று ஏற்பட்டதல்ல—தமிழிலே உள்ள பழைய நூல் தொல்காப்பியம். தொல்காப்பியம் என்பதற்கே பழைய காப்பியம் என்று பொருள் கூறலாம்.

அந்த நூலில், 'ஏன் சில முறைகள் பிரித்து வகுக்கப்பட்டன' என்பதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ள ஆசிரியர், 'எம்மனோர் புலவர்கள்' வகுத்த முறைப்படி செய்வதாகக் கூறுகிறார்.

'எம்போன்ற புலவர்கள் சொன்ன முறைப்படி' என்று அவர் சொல்வதால் அவருக்கு முன் ஏராளமான புலவர்கள் இருந்தார்கள் என்பது தெளிவாகிறது.

தமிழ் இலக்கியங்களிலே, 'வெளவால் மனப்பான்மை' என்று ஒன்றைக் குறிப்பிடுகிறார்.

மாமரத்திலே தலைகீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும் வெளவால், புளியம்பழத்தைப் பற்றி நினைத்துக்கொண்டிருக்குமாம்.

அதுபோல், இதுவரை நாம் மாமரத்தில் தொங்கிக்கொண்டு, புளியம்பழத்தை நினைத்துக் கொண்டிருந்தோம்!

இப்பொழுதுதான், 'நாம் தொங்கிக் கொண்டிருப்பது மாமரம்' என்பதை உணர்ந்து, மாம்பழத்தை நினைக்க ஆரம்பித்திருக்கிறோம்!

[illegible] வெளவால் ம[illegible] [illegible]லிருந்து விலகி [illegible] [illegible]மைக்கு வந்திரு[illegible] 'எதையும் சொ[illegible] [illegible]களைப் அறி[illegible] முடிவுக்கு வந்திரு[illegible]

முழுச் சுவை[illegible] [illegible]ரும் மனப்பான்மை[illegible] வளர்ந்து வருகிற[illegible]

தமிழ் வெளியீட்டு[illegible] வரை 150 நூல்களை [illegible] உள்ளது பாராட்டத்தக்கு[illegible]

தமிழ் வெளியீட்டுக் கழ[illegible] வெளியிட்டுள்ள பொருள[illegible] நூல்களை ஒரு தட்டில் [illegible] விடலாம்; ஆங்கிலத்தி[illegible] கும் பொருளாதார[illegible] இந்த மண்டபம் முழுதும் [illegible]லாம்.

ஆயிரக்கணக்கில் இ[illegible] கும் அந்த அறிவுக் களஞ்சியங்கள் அனைத்தையும் [illegible]மிழில் வெளியிட வேண்டும்[illegible]

'தமிழைப் பா[illegible] பார்க்கலாம்' என்று சொ[illegible] பொழுது ஒரு சிலர், 'தமி[illegible] என்ன இருக்கிறது? [illegible] குறள் இருக்கிறது—[illegible] யணம் இருக்கிறது—[illegible]ரம் இருக்கிறது—[illegible] கம் இருக்கிறது—[illegible] களைத் தவிர வேறு [illegible] இருக்கிறது [illegible] சொல்லிக் கொ[illegible] என்று கேட்டார்கள்.

அவர்களுக்கு [illegible] சொல்லும் வகை[illegible] [illegible] முடியும்; எல்லா[illegible] களும் உள்ளன' என்[illegible]பதை நிரு பித்துக் காட்டும் முறையில்—தமிழ் வெளியீட்டுக் கழகம் பணியாற்றி வருகிறது.

இது, வேறு யாருக்[illegible] அல்ல—நமக்கு நா[illegible] எல்லாவற்றையும் [illegible] முடியும் என்பதை எடு[illegible] டவே செய்யப்பட்டது.

என்னுடைய மதிப்புக்குரிய நண்பர் சி. சுப்பிரமணியம் அவர்கள்கூட, 'தமிழால் என்ன செய்ய முடியும்' என்று வினா எழுப்பியவர்களுக்குப் பதில் சொல்லும் வகையில், 'தமிழால் முடியும்' என்ற புத்தகத்தை வெளியிட்டார். அதைப் பார்த்தபோது எனக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது; அதே நேரத்தில் மனத்தில் கவலையும் எழுந்தது.

தமிழர்களுக்குத் தமிழ்நாட்டிலே, 'தமிழால் முடியும்' என்று நூல் எழுதிக் காட்டவேண்டிய நிலைமை இருக்கிறதே என்பதுதான் அந்தக் கவலை!

இதை உணர்ந்து ஆசிரியப் பெருமக்கள், தமிழில் ஏராளமான நூல்களை எழுதி உதவ வேண்டும்.

நம்மிலே சிலர் தவறாக எண்ணிக்கொண்டிருக்கிறோம்;—'சரித்திரத்தை ஆங்கிலத்தில்தான் படிக்க முடியும்; பூகோளத்தை ஆங்கிலத்தில்தான் படிக்க முடியும்; மருத்துவத்தை ஜெர்மன் மொழியிலேதான் படிக்க முடியும்' என்ற அந்தத் தவறான மனப்பாங்கு நீங்கவேண்டும்.

பிற மொழிக் கருத்துக்களை எளிதாக்கிச் சொல்லக்கூடிய தன்மை நம்மவர்களுக்கு உண்டு.

கடந்த டிசம்பர், சனவரி, பிப்ரவரி மாதங்களில் நாங்களெல்லாம் பொதுத்தேர்தலில் ஈடுபட்டிருந்தபோது 'பாராளுமன்றம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்திவந்தோம்.

ஒரு கூட்டத்தில் கலந்து கொண்ட மூதறிஞர் இராஜாஜி, "பார்லிமெண்ட் என்பதற்கு, 'பாராளுமன்றம்' என்று சொல்கிறீர்கள்; வெள்ளைக்காரன், பாரை எல்லாம் ஆண்டான்—அதனால், அவனுடைய பார்லிமெண்ட 'பாராளுமன்றம்' என்று சொல்லலாம்; நம்முடைய பார்லிமெண்டை, 'பாராளுமன்றம்' என்பதைவிட, 'நாடாளுமன்றம்' என்று சொல்லுவதே பொருத்தம்" என்றார்.

ஒருவருடைய கூர்த்த மதியால் அருமையான சொல்லே தோன்றியது!

அந்தக் கூட்டத்திலேயே நானே சொன்னேன்—"தேர்தல் நேரம் இது; இதுவரை நாங்கள், 'பாராளுமன்றம்' என்ற வார்த்தைகளையே பயன்படுத்திவந்தோம்; திடீரென்று, 'நாடாளுமன்றம்' என்று சொன்னால், 'இவன், பாராளுமன்றத்திற்கு நிற்கவில்லை; வேறு எதற்கோ நிற்கிறான்' என்று நினைப்பார்கள்; தேர்தல் முடிந்தவுடன், 'நாடாளுமன்றம்' என்பதை [illegible] வருகிறோம்" என்று.

இப்பொழுது, 'நாடாளுமன்றம்' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகிறோம்!

இப்படி, தமிழில் புதிய சொற்கள் உருவாக வேண்டியது அவசியமாகும். அது நம்முடைய மேம்பாட்டுக்கு வழிவகுக்கும்"

விழா நிகழ்ச்சி

மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

தமிழ் வெளியீட்டுக்கழகப் பணிகளை அவர் விவரித்தார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழ்ப் பற்று என்பது, ஆன்மீகப் பற்றுக்கு ஈடானது.

கல்வித் துறையில் ஒரு பெரும் புரட்சி நிகழ்ந்தால்தான் நம் நாடு முன்னேற்றமடையும்.

இங்கே மத்திய கல்வியமைச்சர் டாக்டர் திரிகுண சென் வந்துள்ளார்கள்; அவர்களுக்கும் நாளைக்குப் புத்தாண்டு பிறக்கிறது. அவர்களுக்கு நம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் இங்கு வந்துள்ள அமைச்சர்களை வரவேற்கிறேன்.

தமிழ்ப் புத்தாண்டு—இவ்வாண்டு எல்லா வகையிலும் தமிழ் மேம்பாடு அடையும் என்ற நம்பிக்கையை நமக்கு அளிக்கிறது."

அடுத்து, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குனர் வே. கார்த்திகேயன், தமிழ் வளர்ச்சித் துறைப் பற்றிய அறிக்கையினைப் படித்தார்.

விழாவுக்குத் தலைமை வகித்த தமிழகக் கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தலைமையுரை நிகழ்த்தினார்.

பின்னர் முதலமைச்சர் அண்ணா அவர்கள் 22 நூல்களை வெளியிட்டு சொற்பெருக்காற்றினார்கள்.

பின்னர், இந்திய அரசாங்கக் கல்வியமைச்சர் திரிகுண சென், தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்துப் பேசினார்.

அ.ச. ஞானசம்பந்தம் நன்றிகூறினார்.

சந்தாதாரர்களுக்கு:

சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவைப் புதுப்பிக்கும்போது, மணிவிடைத் தாளில் தங்கள் சந்தா எண்ணைத் தவறாது அவசியம் குறிப்பிட வேண்டுகிறோம்.

—மேலாளர், 'நம் நாடு'

'திட்டங்களில் சிக்கலை உருவாக்குவது நல்ல பண்பாடாகாது'

'மக்கள் அடிப்படைத் தேவைகளை அரசு நிறைவேற்றித் தீரவேண்டும்'

'தொழிலாளர்கள் நலனைப் பாதுகாக்கத் தொழிலதிபர்கள் முன்வருவது அவசியம்'

திருவொற்றியூர் குடியிருப்புக் காலனித் திறப்புவிழாவில் முதலமைச்சர் அண்ணா தெளிவுரை

சென்னை, ஏப். 14—

"நாகரீக நாடு என்றால், மக்களுக்கு அந்த அரசு உண்ண உணவு—உடுக்க உடை—இருக்க இடம் இவைகளைத் தந்து, வாழ்வதற்கு வசதிஏற்படுத்தித் தரவேண்டும்; அப்போதுதான் அதை ஒரு நாகரீக நாடாகக் கருதப்படும்-மதிக்கப்படும்"

என்று, திருவொற்றியூர் இம்பீரியல் டுபாக்கோ கம்பெனி'த் தொழிலாளர்கள் குடியிருப்பு திறப்புவிழாவில் கலந்துகொண்ட தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், குடியிருப்பைத் திறந்துவைத்தும் பேசுகையில் சுட்டிக்காட்டினார்கள்.

சுமார் 107 வீடுகளுக்குத் திட்டம் தீட்டி, 52 வீடுகளே தற்போது கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வீட்டின் நில அளவு 45'×35'; நிலத்தின் மதிப்பு ரு. 1,000; கட்டிடத்தின் மதிப்பு ரு. 7,000; ஆக, வீட்டின் மதிப்பு ரு 8,000 ஆகும்.

இதைக் கட்டி முடித்ததில் ரு. 3,100 துண்டு விழுந்ததாகவும் அதை எப்படியும் சரிக்கட்டித் தீர வேண்டும் என்றும் தொழிலாளர் சங்கத் துணைத் தலைவர் எம். வி. நாராயணசாமி கூறினார்.

இந்தக் காலனியைக் கட்டி முடிக்க, கம்பெனி முதலில் இனமாக ரு 30,000 அளித்திருந்தது; விழாவில் கலந்துகொண்ட கம்பெனியின் நிர்வாக உரிமையாளர் திரு மித்ரா, ரு 50,000-க்கான காசோலையைக் கொடுத்து, 'இது, இக்காலனியில் மீதமிருக்கும் வீடுகளைக் கட்டி முடிக்க—இம்பீரியல் டுபாக்கோ கம்பெனியால்—வட்டியில்லாக் கடனாகத் தொழிலாளர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது' என்று அறிவித்தார்.

திரு மித்ரா அவர்களது முயற்சியால், 'திருமண மண்டபம்' ஒன்றும் இக்காலனியில் கட்டி முடிக்கப்படும் என்ற கருத்தறிவிக்கப்பட்டது.

விழாவில், அ. பொ. அரசு, கே. குருமூர்த்தி, கம்பெனியின் பொதுமேனேஜர், மானேஜிங் டைரக்டர், தொழிற்சங்கத் துணைத் தலைவர் நாராயணசாமி, கம்பெனியின் யூனியன் தலைவர் டி. எஸ் இராமானுசம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

திரு. டி. ஏ. ஆதிநாராயணன் வரவேற்புரை வழங்கினார்.

திரு. டி. எஸ். இராமானுசம் அவர்கள் தனது தலைமையுரையில் அறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்டிப் பேசுகையில் "பதுக்கல் பேர்வழிகள்—கொள்ளை இலாபக்காரர்கள் — கடத்தல்காரர்கள் தான் அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சிக்கு விரோதிகளாவர்; எனவே, தொழிலாளர்கள் வாழ நிச்சயம் வழிவகை செய்வார்" என்று உணர்ச்சி பொங்கக் கூறினார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் பேசியதாவது:—

"50-க்கும் மேலான—அழகான இல்லங்களைத் தொழிலாளர்கட்கு திறந்துவைக்கும் வாய்ப்பினை எனக்கு நல்கியமைக்காக நன்றியையும், மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இத்துணை நல்ல பணிகளில் தனது ஒத்துழைப்பினைத் தந்து தொழிலாளர்களுக்கு உதவி புரிந்துவரும் டி. எஸ். இராமானுசம் அவர்களுக்கும் எனது மகிழ்ச்சியையும், பாராட்டினையும் உரித்தாக்குகிறேன்.

தொழிலாளர்களின் நலன் கருதியே, இதுபோன்ற காலனிகள் அமைத்துத் தருகிறார்கள்—தொழிலதிபர்கள்.

இதுபோன்ற காலனிகளுக்கு அரசும் தன்னாலான உதவிகளைச் செய்துவருகிறது; அப்படிப்பட்ட உதவி இந்த டி.எஸ் ஆர். நகருக்கும் கிடைக்கும் என்று நான் உறுதி கூறுகிறேன்.

தருகின்ற உள்ளங்கள் தான் மீண்டும் மீண்டும் தந்து கொண்டே இருக்கும்; அதனால்தான் இப்படிப்பட்ட வசதிகளைச் செய்துள்ள இந்த நிறுவனத்தின் நிர்வாக உரிமையாளரையே, மீண்டும் மீண்டும் தொழிலாளரது வேண்டுகோளான — திருமணக் கூடத்திற்கான செலவையும் ஏற்று, அதனை முடித்துத் தரும்படிக் கேட்டுக்கொண்டுள்ளனர். தொழிலாளர் நலனில் இத்துணை அக்கறை காட்டும் அவர், நிச்சயம் அதையும் முடித்துத் தருவார் என்று நம்புகிறேன்.

இந்தக் காலனிக்கு அரசின் உதவி எந்த அளவுக்குக் கிட்டும் என்பதை அதிகாரிகளை கலந்து கூறுகிறேன்.

'அரசு உதவும்' என்று சொன்னேன்; மத்திய அரசு எந்த அளவிற்கு நமது மாநில அரசிற்கு உதவ முன்வருகிறது என்பதைப் பொறுத்துத்தான் சொல்ல முடியும்.

எனவே, இவ்விழாவில் கலந்து கொண்ட நண்பர் கே. குருமூர்த்தி, தாம் சார்ந்துள்ள காங்கிரசுக் கட்சிக்காரர்களிடம் கூறி, மத்திய அரசின் உதவி கூடுதலாகக் கிடைத்திட அவராலான வழிவகைகளைச் செய்யலாம்.

இன்றையத்தினம் மாநில அரசு, மத்தியில் இருந்துகொண்டு—இக்கட்டான நிலையில் ஏதும் செய்ய இயலாமல்—சிற்சில சமயங்களில் தவிக்கிறது; மேலே பார்த்தால் மத்திய அரசு; மாநில அரசின் நிர்வாகத்திற்குக் கீழே பார்த்தால் நகரசபை; இரண்டும், இத்தொகுதியைப் பொறுத்தவரையில காங்கிரசிடம் இருப்பதால், அவர்களும் ஒன்றுபட்டுத் தொழிலாளர் நலனில் அக்கறை காட்டி ஆவன செய்யவேண்டுமெனப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

டெல்லியில், மொரார்ஜி தேசாய், 'இவ்வாண்டில் இது போன்ற திட்டங்களுக்கு அதிகம் உதவ முடியாது' என்று கூறிவிட்டார்.

40'×20' அளவுள்ள வீடு கட்டத் திட்டம் தந்து—உதவிடவும் உறுதியளித்துவிட்டு—நான்கு சுவர்களை உள்ள அந்த அறைக்கு இரண்டு சுவர்களின் வேலை முடிந்த பிறகு—உறுதியளித்த தொகை வராததால், மீதி இரண்டு சுவர்களையும் வைக்க முடியாமல்—உறுதியளித்தவரைக் கண்டு கேட்கின்றபோது, 'மீதி இரண்டு சுவர்களையும் 10'×5' அளவுள்ள சுவர்களாக அமைத்துக் கொள்ளுங்கள்; இல்லையாயின் அந்த திட்டத்தையே — அந்தப்பணியினையே நிறுத்திவிடுங்கள்' என்று கூறினால், அது எத்தனை சிக்கல் நிறைந்ததாய் முடியுமோ—அத்திட்டத்தால் எத்தனை கட்ட நட்டங்கள் ஏற்படுமோ—அதுபோல்தான் இன்றையத் திட்டங்களும், மொரார்ஜியின் நிதியுதவி உறுதிமொழியும் இருந்து வருகிறது!

இப்படித் திட்டங்களில் சிக்கல்களை உண்டாக்கக் கூடாது! பாதியில் நிறுத்திக் கொள் என்பது, நல்ல சனநாயகமாகாது—நல்ல பண்பாடாகாது—அது அவர்களின் நல்ல சுபாவத்தையும் காட்டாது! அது முறையுமல்ல—சரியுமல்ல!

இந்தக் காலனிகூட, திட்டம் தீட்டிய அன்றே—4, 5 ஆண்டுகட்கு முன்பே மத்திய அரசினர், சீனாவின் எதிர்ப்பைக் காரணம் காட்டாது நிதியுதவி செய்திருந்தால், இன்று ரு. 8,000 ஆகக் கூடிய வீட்டின் மதிப்பு, ரு 4,000-க்குள் முடிந்திருக்கும்.

சட்டிடம் கட்டுவதற்கு மட்டுமல்ல இந்த விதி; வீட்டில் பெற்றோர்கள் தங்களது மகன்களுக்கு 18, 20-வயதுக்குள் திருமணம் செய்துவிடுவது தான் சுலபமான வழி; அதை விடுத்து. 35—40 வயதில் பெண் தேடினால், தரமுள்ள பெண், வயதான மாப்பிள்ளைக்குக் கிடைக்கக் கூடுமா?

அதுபோலத்தான், எதையும் காலாகாலத்தில் — திட்டமிட்டவுடனேயே திட்டத்தை முடித்திடப் பாடுபடவேண்டும்: இல்லையாயின், இப்படித்தான் கட்டங்களும், நட்டங்களும் வந்து குவியும்.

எனவே, இத்தொழிற்சாலை அதிபர் மித்ரா அவர்களுடனும், தொழிற்சங்கத் தலைவர் டி. எஸ். இராமானுசம் அவர்களுடனும் கலந்து, 'யார் யாரிடமிருந்து எவ்வளவு பெற முடியும்' என்பதைத் தெரிந்து வைத்துக்

(4-ம் பக்கம் பார்க்க)

மக்களுக்கு உணவளிக்க முடியாத எந்த அரசும் ஆளத் தகுதியற்றதே!

இதனை நினைவில்கொண்டே செயலாற்றுகிறோம்

எங்கள்குரல் எப்போதும் தொழிலாளர் பக்கமே ஒலிக்கும்

அமைச்சர் கே.ஏ.மதியழகன் உரை

சென்னை, ஏப். 15—

"'கடன்கார அரசாங்கமே' என்று நாம் அரசினரைச் சாடியபோது, காங்கிரசுக் கட்சியினர் கோபித்துக் கொண்டார்கள்; அவர்கள் வைத்துச் சென்ற கடனை நாம்தான் அடைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

"ஊதாரித்தனமாக நாட்டை ஆண்டவர்கள் நம்மிடம் ஒப்படைத்துச் சென்றது ஒரு நாளைய உணவுதான்! நாம் இன்னும் கொஞ்சம் ஏமாளித்தனமாக இருந்திருப்போமானால், நிர்வாக இயந்திரத்தைச் சீர்குலையச் செய்திருப்பார்கள்—கோளாருக்கியிருப்பார்கள்!

"கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, 'உணவுப் பங்கீட்டுக் கடைகளில் அரிசி இல்லை' என்றார்கள்; கழகம் ஆட்சிக்கு வந்ததும், தஞ்சையிலிருந்து சென்னைக்கு அரிசி வருவதற்கு ஒருநாள் சுணக்கமாகியது; அதை வைத்துக்கொண்டு 'அரிசி இல்லை! அரிசி இல்லை' என்று காங்கிரசார் பேசினர்.

"நாட்டில் இருந்த பயங்கரமான உணவுச் சிக்கலைத் தீர்ப்பதற்குத் திடமனத்துடன் பிரச்சினையைச் சமாளிக்க நாம் ஈடுபட்டோம்!

"'எந்த அரசாக இருந்தாலும் — மூன்று வேளை உணவினைக்கூட மக்களுக்குக் கொடுக்க முடியாத அரசு எந்த அரசாக இருந்தாலும் — முன்னேற்றக் கழகமானாலும்—முஸ்லீம் லீக்கானாலும்—பொதுவுடைமைக் கட்சியானாலும்—பி. சோ. கட்சியானாலும், சட்டப்படிகூட அல்ல—தார்மீகப்படிகூட நாட்டை ஆளத் தகுதி படைத்தது அல்ல'என்று தேர்தலுக்கு முன்பு பேசியதை நினைவில் கொண்டுதான் ஆட்சி செய்கின்றோம் — நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்"

என்று, பெரம்பூர் பகுதித் தி.மு.க. சார்பில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன் பேசுகையில் தெளிவுபடுத்தினார். அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காலியான தானியக் கிடங்கில் 3 இலட்சம் டன் தானியத்தைச் சேர்த்து வைத்திருக்கின்றோம் என்பதை நாம் மகிழ்ச்சியோடு கூறிக்கொள்ள முடியும்.

நடைபெறும் ஆட்சி தொழிலாளர் ஆட்சியாகும். முதலாளிக்கும்—தொழிலாளர்களுக்கும் இடையே பிரச்சினை என்றால், எங்கள் குரல் தொழிலாளர்கள் பக்கம்தான் இருக்கும்!

நாட்டில் உள்ள வறுமையை அகற்ற—மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முயற்சி எடுத்து வருகின்றோம்.

மக்கள் மகிழ்ச்சியுடன்—மன நிறைவுடன் வாழ தி. மு. கழகம் பாடுபடும்."

நாம் எதிர்க் கட்சியாக இருந்தபோது, நமக்குக் கிடைக்க வேண்டியவற்றை வாதிட்டுப் பெற்றோம். இப்போது, ஆட்சி நம்மிடம இருக்கிறது; ஆகவே, உங்கள் கோரிக்கைகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.

மக்களுக்குத் தொண்டு செய்வதையே பெரிதாக—பெருமையாகக் கொண்டவர்கள் தி. மு. கழகத்தினர். ஆகவே, உங்கள் இதயங்களில்தான் இடம் தேடுவோம்.

உங்கள் இதயங்களில் இருக்கும் அன்புதான் நிலையானது—நிரந்தரமானது!

பதவி' என்பது இன்று வரும்—நாளை போகும்! பதவியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி மக்களுக்கு உழைப்போம்!"

இதயங்களின் அன்பே நிலையானது—நிரந்தரமானது!

அமைச்சர் சத்தியவாணிமுத்து தரும் உறுதி

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள், மக்கள் மன்றத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததால்தான் காங்கிரசுக் கட்சி, மக்களின் நம்பிக்கையை இழந்து விட்டது என்பதை நாம் மறந்து விடுவதில்லை. கோரிக்கை நியாயமானதாக இருந்தால், எந்த நிலையிலும்—எந்த நேரத்திலும் அதை நிறைவேற்ற முயற்சி எடுத்துக் கொள்வேன்.

இராஜஸ்தானில்

காங்கிரசுக்கே பெரும்பான்மை பலம் இருக்கிறதாம்!

சுகாதியாவின் கூற்று

"இராஜஸ்தான் சட்டமன்றத்தில் காங்கிரசுக்கே பெரும்பான்மை பலம் இருக்கிறது" என்று சுகாதியா கூறியுள்ளார்.

அதிகாரமும் பதவியும், [illegible] குறிக்கோள் [illegible]ராம்! சோஷலிசமே [illegible] இலட்சியமாம்!

பல மாநிலங்களில் எதிர்க்கட்சி அமைச்சரவைகள் செயல்படுவதே காங்கிரசின் மக்களாட்சி உணர்வை [illegible]குமாம்!

இவை அனைத்தும், சுகாதியாவின் கூற்றுக்களாகும்.

நாட்டைவிடக் கட்சியையே பெரிதெனமதிக்கின்றனர் காங்கிரசார்

வானொலி

18—4—67 செவ்வாய்

★

சென்னை-1

(416.7 மீ. 720 கி.சை.)

காலை

6-00 மங்கள இசை
6-05 துதிப்பாடல்கள்
6-30 நிகழ்ச்சிக் குறிப்புகள்
6-35 அருள் வாக்கு
6-40 விவசாயிகள்
6-45 இசை அமுதம்
7-15 தமிழில் செய்தி
7-30 நெய்வேலியின் நிதி
8-00 கிளாரினெட்
8-30 இசை மலர்
8-15 கீதமஞ்சரி
9-15 வீணை
9-45 பாட்டு
10-30 மதுரகீதம்
10-55 ஆங்கிலத்தில் செய்தி
11-55 வட்டாரச் செய்திகள்
12-00 தொழிலாளர்களுக்கு
12-30 பாட்டு
1-00 மாதர் நிகழ்ச்சி
1-30 வாத்தியக் குழு
1-45 திரை இசை
1-55 வானிலை அறிவிப்புகள்
2-00 தமிழில் செய்தி

மாலை

5-30 வீணை
6-00 இடைவேளை
6-05 வட்டாரச் செய்திகள்
6-15 திரை இசை
6-45 தொடர் நாடகம்
7-10 இடைவேளை
7-15 தமிழில் செய்தி
7-30 திருச்சி அஞ்சல்
8-00 மதவரம் பால் பண்ணைத் திட்டம்
8-30 மாதமொரு மலர்
8-45 வாத்திய இசை
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 நாதசுரம்
10-30 திரை இசை
11-00 பாமாலை
11-30 இந்தியில் இசை

சென்னை-2

211 3 மீ. (1 420 கி.சை.)

காலை

6-00 சென்னை 1-ல் உள்ளபடி
6-40 ஆங்கிலத்தில் செய்தி
6-45 சென்னை 1-ல் உள்ளபடி
7-00 தெலுங்கில் செய்தி
7-15 இசை மலர்
7-30 சென்னை 1-ல் உள்ளபடி
8-00 ஆங்கிலத்தில் செய்தி
11-55 சென்னை 1-ல் உள்ளபடி
1-00 ஆங்கில நிகழ்ச்சி
1-30 ஆங்கிலத்தில் செய்தி
1-40 இந்தியில் செய்தி
1-50 தெலுங்கில் செய்தி

மாலை

5-30 மேனாட்டு இசை
6-00 ஆங்கிலத்தில் செய்தி
6-05 சென்னை 1-ல் உள்ளபடி
6-15 இடைவேளை
6-20 வானிலை அறிவிப்பு
6-45 வாத்திய இசை
7-00 தெலுங்கில் செய்தி
7-15 தெலுங்கு நிகழ்ச்சி
7-30 கீத் மாலிகா
8-00 பாட்டு
8-30 டெல்லி அஞ்சல்
8-40 இடைவேளை
8-45 சென்னை 1-ல் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 செய்திச் சுருள்
9-20 இடை வேளை
9-30 ஆங்கில நிகழ்ச்சி
10-30 ஆங்கிலத்தில் செய்தி

திருச்சி

319.1 மீ. (900 கி.சை.)

காலை

6-30 மங்கள இசை
6-40 ஆங்கிலத்தில் செய்தி
6-45 ஆங்கிலத்தில் அறிவிப்பு
6-50 பக்திப் பாடல்
6-55 அறவுரை
7-00 துதிப்பாடல்கள்
7-15 தமிழில் செய்தி
7-30 துதிப் பாடல்கள்
8-00 ஆங்கிலத்தில் செய்தி
[illegible] திரை இசை
[illegible] விளையாட்டரங்கம்
[illegible] வட்டாரச் செய்திகள்
[illegible] தொழிலாளர்களுக்கு
[illegible] திரை இசை
[illegible] ஆங்கிலத்தில் செய்தி
[illegible]0 இந்தியில் செய்தி
[illegible]50 இசை மஞ்சரி
[illegible]00 தமிழில் செய்தி

மாலை

5-00 பாட்டு
5-30 துதிப்பாடல்கள்
6-00 அறிவிப்புகள்
6-05 வட்டாரச் செய்திகள்
6-15 இடைவேளை
6-20 பலகணி
6-35 பார்ச்சாவடி
6-40 வாத்திய இசை
6-45 சென்னை 1-ல் உள்ளபடி
7-15 தமிழில் செய்திகள்
7-30 விவசாயிகட்கு
8-30 டெல்லி அஞ்சல்
8-45 நாட்டுப் பாடல்கள்
9-00 ஆங்கிலத்தில் செய்தி
9-15 பாட்டு
[illegible]30 ஆங்கிலத்தில் செய்தி

உணவு இறக்குமதியைப் பாதிக்கும்வகையில் துறைமுகத் தொழிலாளரைத் தூண்டுகின்றனர்

பொறுப்பற்ற முறையில் ஆண்டுவிட்டு இப்போது பொறுப்பற்ற கேள்வி கேட்பதா?

பாராட்டு விழாவில் கி. மனோகரன் முழக்கம்

சென்னை, ஏப் 15—

"முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம், முகவரி தேடும் வேலையில் ஈடுபட்டுள்ளார், எங்களின் முகவரியைப் பற்றி, திரு. பக்தவத்சலம் கவலைப்பட வேண்டாம்; புருவத்தை மேலே ஏற்றிக்கொண்டு—நெஞ்சை நிமிர்த்தி—'நாங்கள் இட்டவை அனைத்தும் சட்டங்கள்தாம்' என்று துப்பாக்கி முனையிலே ஆட்சி செய்ததால் தமிழக அரசியலிலிருந்து தூக்கியெறியப்பட்டு, அதனால் மனம் வெதும்பி — உள்ளத்தில் ஆவேசம் ஏற்பட்டதால் முகவரியைப் பற்றிப் பக்தவத்சலம், பேசியிருக்கின்றார்!

"மக்களை விட்டு எந்தக் கட்சி பிரிந்து செல்கிறதோ, அந்தக் கட்சி—மக்களை மறந்து தனிப் பாதை செல்லும் கட்சி எப்படிப்பட்ட கட்சியாக இருந்தாலும்—அது, மக்கள் மன்றத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு, முகவரி இழக்க வேண்டியது தான். கடந்த 20 ஆண்டுக்காலக் காங்கிரசு ஆட்சியையும், அது மக்களால் தூக்கியெறியப்பட்டிருப்பதையும் எடுத்துக்காட்டுக்காகக் கூறுகின்றேன்"

என்று, தோழர் கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., பெரம்பூர் பகுதியில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில் கூறினர்.

பெரம்பூர் பகுதி தி. மு. கழகச் சார்பில் உணவுத் துறை அமைச்சர் கே. ஏ. மதியழகன், நாடாளுமன்ற உறுப்பினர் கி. மனோகரன், தாழ்த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து ஆகியோருக்குப் பாராட்டுக் கூட்டம், பெரம்பூர் லெஷர் லேன் குடியிருப்பில், 12—4—67-ல் நடைபெற்றது.

தோழர் தனசேகரன் தலைமை வகித்தார்.

தோழர்கள் நல்லதம்பி எம்.சி., பகுதிச் செயலாளர் மாசிலாமணி மா. மு. கிருட்டினசாமி சந்திரமோகன், நாராயணசாமி கோ லோகநாதன் எம்.சி., டி. நடராசன் எம்.சி., அன்பிற்சரசன் எம்.சி., கங்காதரன், பொன். சண்முகம், பாலன் எம்.சி., வரதராசன் எம்.சி. ஆகியோர் பேசினர்.

பகுதிச் செயலாளர் தோழர் மாசிலாமணி, கே. ஏ. மதியழகன், கி. மனோகரன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோருக்கும் பாராட்டிதழ்கள் படித்தளித்தார்.

காங்கிரசாரால் தாக்குதல்களுக்கு ஆளான கழகத் தோழர்கள் கல்யாணம், இராசு, பழனிச்சாமி, பகுதிச் செயலாளர் மாசிலாமணி ஆகியோருக்கு தோழர் கி. மனோகரன் கைத்தறித் துண்டு அணிவித்துப் பாராட்டினர்.

மற்றும் அமைச்சர் கே. ஏ. மதியழகன், அமைச்சர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பேசினர்.

தோழர் கி. மனோகரன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த பெரிய மனிதர்கள், துறைமுகத் தொழிலாளர்களைத் தூண்டிவிட்டு—துறைமுகத்திற்கு வெளிநாட்டு உணவு வரும் வேளையில் வேலைநிறுத்தம் செய்து — நாட்டை அல்லோலகல்லோலப்படுத்த விரும்புகின்றனர் எனத் தொழிலாளர்கள் மூலம் அறிந்தேன்.

"நாடு அல்லல்படட்டும்; தொல்லையில் சிக்குண்டு தவிக்கட்டும்" என்றுதான் காங்கிரசார் கருதுகின்றனர்!

காங்கிரசார் அரசியலைப் பெரிதாகக் கருதுகின்றார்களே தவிர, நாட்டைப் பெரிதாக மதிக்கவில்லை.

நம்மைப் பொறுத்த வரையில், 'கடமை எது? பொறுப்பு எது?' என்று ஆய்ந்து செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம்.

காவல் துறையினர் துப்பாக்கியைத் தூக்கி வருகின்றனர் என்றால், பச்சிளங் குழந்தைகள் கூடப் பயம் கொள்ளாது, பாசத்தோடு பார்க்கின்ற நிலையை உருவாக்க வேண்டும்.

தமிழகத்தில் மருந்துக்குக் கூட ஒரு துப்பாக்கிப் பிரயோகம் நடக்காதபடி நாம் ஆட்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

தோற்றுத் துவண்டு இருப்பவர்கள்—நொந்து போய், வெந்துபோய் இருப்பவர்கள்—'எங்கே 3 படி' என்கிறார்கள்!

பஞ்சத்திலும் பட்டினியிலும் நம்மைத் தாலாட்டியவர்கள்—20 ஆண்டுகளாக அரசு இயந்திரத்தைத் துருப்பிடிக்கச் செய்து நிர்வாகத்தைக் குலைத்

தவாகவே — துருப்பிடித்த இயந்திரத்தைத் திரு அகற்றி நாம் முடுக்கி விட்டுக் கொண்டிருக்கும்போது 'எங்கே 3 படி?' என்கிறார்கள்,

மூன்று ரூபாய்க்கு ஒரு படி அரிசி கொடுக்க இலாயக்கற்றவர்கள், விட்டு விட்டுச்

சென்ற நிர்வாக இயந்திரத்தின் துருவினை நாம் அகற்றிக் கொண்டிருக்கும் போது நம்மைப் பார்த்து இப்படிக் கேட்கிறார்கள்!

ஆட்சிப் பொறுப்பை நம்மிடம் அவர்கள் விட்டுச்சென்ற போது, 22 இலட்சம் மக்களைக் கொண்ட சென்னை நகரத்திற்கு 500 டன் உணவுதான் வைத்துவிட்டுச் சென்றார்கள்! அந்த உணவு சென்னை நகரத்தின் ஒரு நாளைய உணவுக்கே போதாது!

திரு. மதியழகன் உணவு அமைச்சரானதும், கடந்த ஒரு மாத காலத்திற்குள் சென்னை நகருக்கு மட்டும் 15 000 டன் அரிசியைச் சேர்த்து வைத்திருக்கின்றார்!

தமிழ்நாட்டு மக்களுக்கு மொத்தத்தில் காங்கிரசு அரசு வைத்திருந்த உணவு 80,000 டன்தான்; மதியழகன் அமைச்சரானதும், 2,90,000 டன் சேர்த்து வைத்திருக்கின்றார்!

காமராசர்கூட, '20,000 டன்னுகத்தான் இருக்கும்' என்றாராம்; 'இல்லை, இல்லை; இரண்டு இலட்சத்து தொண்ணூறு டன்கள்தான்' என்றனராம்; 'அப்படியானால், பாராட்ட வேண்டியதுதான்' என்று காமராசர் கூறியதாகக் கேள்விப்பட்டேன்.

நிறைவுள்ள உள்ளங்களைக் கேட்கின்றேன் — ஆட்சிக்கு வந்திருக்கும் புதிய கட்சிக்கு சந்தர்ப்பத்தைக் கொடுக்காமல், 'எங்கே 3 படி? எங்கே 3 படி?' என்பதும், நாகல் நடையில் பேசுவதும் நல்ல அரசியலுக்கு எடுத்துக்காட்டாகுமா?

மேற்கு வங்க முதலமைச்சர் அஜாய்குமார் முகர்ஜியைச் சந்தித்தேன்; அவர், தமிழ் மக்களை வெகுவாகப் பாராட்டினார்.

திறமை வாய்ந்த வழக்கறிஞர் சாட்டர்ஜியைப் பார்த்தபோது, 'தமிழ் நாட்டு மக்கள் மிக உயர்ந்த மக்கள்' என்று புகழ்ந்து கூறினர்; 'பழைய அமைச்சர் ஒருவரைக்கூடக் காண முடியவில்லையே' என வியந்து அவர் கேட்டார்!

காமராசர் இப்போது கூறுகின்றார்—'காங்கிரசுக் கட்சி தமிழகத்தில் தோற்றதற்கு, தி மு. கழகத்தின்மீது மக்களுக்குள்ள அன்பினால் அல்ல; மக்கள், மாற்றம் வேண்டும் என்று கருதினர்கள்; அதனால், தி. மு. கழகம் வெற்றி பெற்றது' என்று!

'மாற்றம் தேவை' என்கிற போது—காங்கிரசின் மீது அருவருப்புத் தோன்றியது என்பதும், தி. மு. க. வெற்றி பெற்றது என்பதால்—கழகம், மக்களின் அன்புக்கு உரிமையுடையதாகியிருக்கிறது என்பதும் விளக்கிக் கூறப்பட வேண்டிய ஒன்றா?

இன்று, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நல்லதொரு மாற்றம் ஏற்பட்டுள்ளது. முன்பெல்லாம், இற்று விழு தல்களை எண்ணித் தத்துவத்திற்கு முடிவு கட்டும் காலமாக இருந்தது; இப்போது, பிரச்சினையை அலசிப் பார்த்து நியாயத்தை உணர்ந்து பார்க்கும் காலம் உருவாகி விட்டது!

இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தில் பெரும் வெற்றியைத் தந்திருக்கிறீர்கள்!

மக்கள் எல்லோரும் நாடாளுமன்றத்தில் அமர்ந்திருந்து ஆட்சி செய்ய முடியாது என்பதால்தான் எங்களைக் கருவிகளாகப் பயன்படுத்தி, சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் அனுப்பியுள்ளீர்கள்.

இந்த வெற்றி, மக்கள் வெற்றி—மக்களாலான வெற்றி—மக்களுக்கே சொந்தமான வெற்றி!

தாய்மை உணர்ச்சியோடு தி. மு கழகத்திற்கு ஆதரவு தந்தீர்கள்; குறிப்பாகத் தாய்க்குலத்தினர் மதிய வெயிலிலே நின்று மாலை வரை காத்திருந்து, 'எங்கள் சின்னம் தி. மு. கழகத்தின் உதய சூரியன்' என்று—அமோக வாக்குகள் அளித்து எங்களைத் தேர்ந்தெடுத்தார்கள்.

எந்தத் தாய்மை உணர்ச்சியோடு நாட்டின் மீது அக்கறை கொண்டு தி. மு. கழகத்திற்கு வாக்களித்தீர்களோ, அந்தத் தாய்மை உணர்ச்சியைத் தி. மு. கழகத்திடமும் நீங்கள் பார்க்கலாம்!

கடுமையான பலப் பரீட்சை!

காங்கிரசு — எதிர்க் கட்சியினரிடை நடைபெறும்

குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரசு—எதிர்க்கட்சிகளிடையே கடுமையான பலப் பரீட்சை நடக்குமெனத் தெரிகிறது.

குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரசின் சார்பாக ஜாகீர் உசேனும்; எதிர்க் கட்சிகளின் சார்பாக சுப்பாராவும் போட்டியிடுகின்றனர்.

இருவரும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துவிட்டனர்.

குடியரசுத் துணைத் தலைவராகக் காங்கிரசின் சார்பில் வி. வி. கிரி போட்டியிடுகிறார்.

எதிர்க் கட்சிகள், வேட்பு மனுத் தாக்கல் செய்யும் நேரம் முடிவதற்குச் சிறிது முன்பு, அலிகார் பல்கலைக் கழக வரலாற்றுப் பேராசிரியர் முகமது அபிப் அவர்களை குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலுக்குத் தங்கள் வேட்பாளராகத் தேர்வு செய்தன.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநிலத் தலைநகரங்களில் இருந்தே குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலிலும் வாக்களிக்க உரிமை கோரினர்; தேர்தல் ஆணையாளர் இது பற்றித் தெளிவான முடிவைக் கூறவில்லை. தலைமையமைச்சரிடம் இதுபற்றி அவர்கள் விவாதிப்பார்.

எதிர்க் கட்சியினருக்கு எழுதியுள்ள இந்திராவின் கடிதத்தில், 'குடியரசுத் தலைவர் தேர்தலில் காங்கிரசு வேட்பாளரை எதிர்க் கட்சிகள் ஆதரிக்கவேண்டும்' எனக் குறிப்பிடப்பட்டிருந்ததாக நிருபர்களிடம் எம். ஆர். மசானி கூறினர்; 'போட்டியைத் தவிர்க்க எதிர்க் கட்சிகள் செய்த முயற்சியைக் காங்கிரசார் புறக்கணித்து விட்டனர்' என்றும் அவர் கூறினர்.

எதிர்க் கட்சி உறுப்பினர்கள், சுப்பாராவ் வெற்றிபெற வேண்டியதன் அவசியத்தை விளக்கி ஓர் அறிக்கை வெளியிடுவார்.

வட்டாரமொழி இதழ்கள் வளரவேண்டியதன் அவசியம்

புதுடில்லியில் அறிஞர் அண்ணா வலியுறுத்தல்

புரட்சிகர மாறுதலை எதிரொலிக்கும் வகையில் அரசினர் செய்தித் துறையில் மாற்றம்?

'யூனிவர்சல் பிரஸ் சர்வீஸ்' (யூ பி எஸ்) செய்தி நிறுவனத்தின் ஆசிரியர் திரு. எம் பி. இராதாகிருஷ்ணன் புதுடில்லி அசோகா விடுதியில் தமிழக முதலமைச்சர் அண்ணா மற்றும் உணவு அமைச்சர் மதியழகன், வேளாண்மைத் துறை அமைச்சர் கோவிந்தசாமி ஆகியோருக்கும், நாடாளுமன்ற தி. மு. கழக உறுப்பினர்களுக்கும் வரவேற்பு அளித்தனர்.

தொடக்கத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்களையும், பிற அமைச்சர்களையும் வரவேற்று எம். பி. இராதாகிருஷ்ணன் பேசினர்.

கடந்த பல ஆண்டுகளாக உள்ளது உள்ளபடியே விருப்பு வெறுப்பு இன்றி தரமான செய்திகளை வழங்கி, இந்தியாவின் வட்டார மொழிப் பத்திரிகைகளுக்கு உதவி செய்வதில் யூ.பி.எஸ் செய்தி நிறுவனம் முன்னோடியாக முக்கிய பங்கேற்றுச் சேவை செய்து வருவதை அவர் விளக்கினர்

மத்திய அரசின் சொல்லும் செயலும்

தேசிய செய்தி நிறுவனம் ஒன்றைத் தொடங்குவதிலுள்ள பல இன்னல்களை இராதாகிருஷ்ணன் விவரித்தார்; இத்துறையில் இந்திய அரசின் ஒத்துழைப்புக் கிட்டவில்லை' என்று அவர் குறிப்பிட்டார்; 'இவ்வளவுக்கும், சிறிய நாளிதழ்களுக்கு எல்லாவிதங்களிலும் ஆதரவளிப்பதாக அரசாங்கம் கூறிக்கொண்டபோதிலும், அரசின் ஒத்துழைப்புக் கிட்டவில்லை' என்று அவர் சொன்னர்.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியைப் பற்றி இராதாகிருஷ்ணன் குறிப்பிடுகையில் சுட்டிக்காட்டியதாவது:—

"செய்தித் தாள்களின் மூலமாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையும், திட்டங்களும் மற்ற மாநிலங்களிலும் பரவ வேண்டியது அவசியம்.

"ஒரு சார்பான மனப்போக்குடன், இந்தியாவிலும் வெளிநாடுகளிலும், மக்கள், தமிழகத்தில் தி. மு. க. அரசு இயங்கும் விதத்தை உன்னிப்புடன் கவனித்து வருகிறார்கள்; எனவே, தமிழகத்தின் தி. மு. க ஆட்சியைப்பற்றித் தெளிவாகப் படம் பிடித்துக் காண்பிப்பதில் செய்தித் துறைக்கு முக்கிய பங்கு இருக்கிறது; ஆனால் தற்போது அமைக்கப்பட்டுள்ள நிலையில் செய்தித்துறை, அதற்குரிய பங்கினை திறம்படச் செய்ய இயலவில்லை.; இன்றும், பின்னரும் ஏற்படும் புரட்சிகரமான மாறுதல்களைப் பிரதிபலிக்கும் வகையில் செய்தித் துறையைத் திருத்தி அமைக்க வேண்டும்."

முதலமைச்சர் யூ. பி. எஸ். நிறுவனத்தின் பணியினைப் பாராட்டுகையில், 'யூ. பி. எஸ். ஆற்றிவருகிற முக்கிய சேவையை நான் அறிவேன்" என்று குறிப்பிட்டார்.

"நாட்டின் சனநாயக அரசியலில் வட்டார மொழிப் பத்திரிகைகள், முக்கிய பணியாற்றுகின்றன அவற்றிற்கு இன்னும் நிறைய பணிகள் காத்திருக்கின்றன; தற்போதுள்ள புதிய சூழ்நிலையில், யூ. பி. எஸ். போன்ற நிறுவனத்தின் பணி, சிறப்புத் தன்மை வாய்ந்தது" என்றார்.

தமிழக அரசாங்கச் செய்தித் துறை வளர்ச்சிக்காக இராதாகிருஷ்ணன் கூறிய சில யோசனைகளைக் குறிப்பிட்ட அண்ணா அவர்கள் அதுபற்றிக் கூறியதாவது:—

"நானும் இதைப்பற்றிச் சிந்தனை செய்து கொண்டிருக்கிறேன். புரட்சிகர மாறுதலை எதிரொலிக்கும் வகையில் செய்தித்துறையைப் பயன்படுத்துவதுபற்றி ஆலோசித்து வருகிறேன்; மற்ற மாநிலங்களில் குறிப்பாக, தென் மாநிலங்களில் தி. மு. கழகத்தின் கொள்கையும், திட்டங்களும் பரவவேண்டிய அவசியத்தைப் பெரிதும் உணர்ந்திருக்கிறேன்."

அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், ஏ. கோவிந்தசாமி ஆகியோரும் யூ. பி. எஸ். நிறுவனத்தின் பணியைப் பாராட்டி, வட்டார மொழிப் பத்திரிகைகள் மென்மேலும் முக்கிய பங்கு ஆற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

போரிடும் உலகம்!

வியட்நாம் போர் சீறி எழுவதற்குமுன் உலக நாடுகள் ஆண்டுதோறும் ஆயுதங்களுக்குச் செலவிட்ட தொகை 13,300 கோடி டாலர். (சுமார் ரூ. 1 இலட்சம் கோடி)

இத்தொகையில் முக்கால் பங்கு அமெரிக்காவும், இரஷ்யாவுமே செலவழித்திருக்கின்றன.

ஆயுதங்களுக்காக உலக நாடுகள் செலவழித்துள்ள தொகை பற்றிய விவரம் வருமாறு:—

அமெரிக்கா	5100	கோடி டாலர்
இரஷ்யா	4200	"
பிரிட்டன்	500	"
சீனா	500	"
ஜெர்மனி	400	"
பிரான்ஸ்	300	"
ஜப்பான்	100	"
இந்தியா	100	"

பாகிஸ்தானுக்கு 600 அமெரிக்க டாங்கிகள்!

மேற்கு ஜெர்மனியிலிருந்து 600 அமெரிக்க டாங்கிகளைப் பாகிஸ்தான் பெறும்; அந்த டாங்கிகள், இப்பொழுது மேற்கு ஜெர்மன் இராணுவத்துக்குத் தேவைப்படவில்லையாம்.

இதுபற்றி அமெரிக்காவின் முடிவு என்ன என்பது தெரியவில்லை. அமெரிக்காவின் புதிய கொள்கையின்படி, பாகிஸ்தானுக்குக் கூடுதலாக ஒரு டாங்கியைக் கூடக் கொடுக்கக்கூடாது.

ஏற்கனவே பாகிஸ்தான், ஈரான் வழியாகக் கனடாவில் தயாரிக்கப்பட்ட 90 ஜெட் விமானங்களையும், 54 இலட்சம் டாலர் மதிப்புள்ள குண்டுகளையும் பெற்றிருக்கிறது.

கருநாடக மாநிலத்திலும் காங்கிரசு ஆட்சி கவிழும்?

எதிர்க் கட்சியினர் குற்றச்சாட்டுகள் அரசினரை வாட்டி வதைக்கின்றன!

புதுடில்லியின் போக்கால் விபரீதம் விளையும்

கருநாடகத்திலும் என்றேனும் ஓர் நாள், சரண் சிங்கைப் போன்று நடந்து, அண்மையிலுள்ள கேரளத்திலும், தமிழகத்திலும் போன்று காங்கிரசு ஆட்சி இல்லாமல் செய்துவிடலாம் என்ற அச்சம், காங்கிரசுக் கட்சி வட்டாரத்தில் வலுத்து வருகிறது.

'ஒரு திடீர்ப் புரட்சியை இவர்தான் உண்டாக்குவார்' என்று காங்கிரசிற்குள்ளிருக்கும் எந்த அரசியல்வாதியையும் இப்போது குறிப்பிட்டுக் காட்டிவிட முடியாது; ஒரு துணையமைச்சர் மட்டும், மைசூர் முதல்வரான நிஜலிங்கப்பாவிற்கு அறைகூவல் விடுத்திருக்கிறார்.

சட்டமன்ற உறுப்பினர்களில் 25-முதல் 30-பேரடங்கிய குழு ஒன்று, அடுத்த நடவடிக்கையை எடுப்பதற்கு முன்னர் நிலைமையைக் கவனித்துக்கொண்டிருப்பதாகவும் பேச்சு அடிபட்டுவருகிறது.

கருநாடகத்தில் நெருக்கடியைச் சமாளிப்பதற்கு நிஜலிங்கப்பா அமைச்சரவையைப் பெரிதாக்குவது ஒரு வழியாகும் என்பது தெளிவு. காங்கிரசு இம்மாநிலத்தின் ஆட்சியில் நீடிக்க வேண்டுமாயின், இவ்வாறு செய்யப்படும் என்றே தோன்றுகிறது.

ஏனெனில், 'வட்டாரங்களுக்கும், [illegible]களுக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் அமைச்சரவையில் பிரதிநிதித்துவம் வேண்டும்' என்ற கூப்பாடு வலுத்துவருகிறது.

கட்சிக்குள் இவ்வாறான குமுறல்கள் ஒருபுறமிருக்க, எதிர்க் கட்சிகளிடமிருந்து அரசாங்கம் விடாத தாக்குதலுக்குள்ளாகி வருகிறது!

அரசாங்க நிர்வாக இயந்திரத்தில் ஊழலும், திறமைக் குறைவும் இருந்துவருகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள், அரசாங்கத்தை வாட்டி வதைக்கின்றன!

பி. சோ. கட்சியினரில் 22 பேருக்குச் சட்டமன்றத்தில் தலைவராயிருக்கும் கருநாடகத்தின் எதிர்க் கட்சித் தலைவரான எஸ். சிவப்பா கூறியதாவது:—

"காங்கிரசில் சாதி உணர்வு மலிந்து கிடக்கிறது. அதன் கைகள் சுத்தமாயில்லை; ஊழல் குற்றச்சாட்டுக்களுக்குத் திருப்திகரமான பதில் இன்னும் கூறப்படவில்லை.

"ஆளுங்கட்சி தனது கடமையை நிறைவேற்றத் தவறிவிட்டது; எஃகு ஆலை வேண்டுமென்ற எங்களது கோரிக்கையையும், எல்லைத் தகராறு முற்றிவருவதையும், ஆந்திரத்துடன் ஆற்றுநீரை நாங்கள் பங்கு கொள்வதையும் எடுத்துக்கொள்ளுங்கள் —ஆளுங் கட்சி இதிலெல்லாம் தவறிவிட்டது!

"அடுத்த தேர்தலில் காங்கிரசுக்கு இப்போதுள்ள சிறு பெரும்பான்மை போய்விடலாம்; இன்றைய அரசாங்கத்தை மாற்றுவதற்கு எதிர்க் கட்சிகளால், ஒரு குறைந்த பட்சத் திட்டத்தை வகுக்க முடியும்."

இப்போதைய நிலையில் கருநாடகத்தில், காங்கிரசு ஆட்சி தொடர்ந்து நிலைக்க முயற்சிகள் நடக்கின்றன.

எடுத்துக்காட்டாக, மதுவிலக்கை உறுதியாக ஆதரித்து நிற்கும் மொரார்ஜி தேசாய் போன்றவர்களை எதிர்த்து மதுவிலக்கை ஒழித்துக் கட்டுவதற்கு கருநாடகம் ஆயத்தமாகி வருகிறது.

மதுவிலக்கை ஒழித்துவிட்ட இரண்டாண்டுக்குள் கருநாடகத்தின் ஆண்டு வருவாய் சுமார் ரூ. 40 கோடியாக உயர்ந்துவிடும் என்று ஒரு மதிப்பீடு கூறுகிறது 'மதுவிலக்குப் பயன் தராது' என்ற எண்ணம் முதலமைச்சருக்கும், நிதியமைச்சருக்கும் இருக்கிறது.

எனவே, புதுடில்லிக்கு ஓரளவு தொல்லை இருக்கிறது; 'மதுவிலக்கு ஒழியட்டும்' என்று அரசியல் ரீதியில் கூறுவதற்கு ஒப்பான வகையில், மதுவைச் சட்டங்களைத் தளர்த்துவது என்று கருநாடக அரசு ஏற்கனவே முடிவு செய்துவிட்டது.

"மதுவிலக்கை எடுத்துவிட்டால் ஏழை மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவர்" என்று நம்புவோரால், ஆளுங்கட்சிக்குள்ளேயே இதற்கு எதிர்ப்பிருக்கிறது; ஆனால், அரசாங்கம் மதுவிலக்கை ஒழிக்கும் தனது கொள்கைக்குக் கட்சியின் ஆதரவைப் பெற்றுவிடும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. இதில் கருநாடகம் [illegible], இதர மாநிலங்களும் உடனே பின்பற்றிவிடும்.

மத்திய அரசின் நிதிக் கொள்கைகள், கருநாடகத் தலைவர்களுக்கு வேதனையைக் கொடுக்கும் மற்றொரு பிரச்சினையாகும். மாநில அரசுகள் அதிகப்படியாக நிதிவளங்களை எழுப்புவதற்குத் துணைபுரிந்தால்தான், அதிகப்பற்று வாங்குவதை ஒழிப்பது உதவும் என்பதை அவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். மத்திய நிதியிலிருந்து பணம் அளிப்பதில் வேறுபாடு காட்டப்படுவதாகப் பல மாநில அரசுகள் கருதுகின்றன.

நிதியமைச்சர் ஹெக்டே இப்பிரச்சினையை வலியுறுத்திக் கூறினர்; அவர் சொன்னதாவது:—

"மாநில அரசுகளின் தேவைகளைக் கவனித்துக்கொள்வதற்காகப் பரந்த வாய்ப்புகளையுடைய ஆற்றல்மிக்க ஒரு நிதிக் குழுவை மத்திய அரசு அமைக்கவேண்டும். சில மாநிலங்கள் — குறிப்பாகக் காங்கிரசல்லாதாரின் ஆட்சியிலுள்ள மாநிலங்கள், 'புதுடில்லியால் நியாயமின்றி நடத்தப்படுகின்றன' என்ற எண்ணத்தைப் போக்கவேண்டும்.

"எனவே, அதுபோன்ற அச்சத்தைப் போக்குவதற்கு, ஆண்டுதோறும் அவற்றின் தேவைகளைக் கவனித்துக்கொள்ளும் ஓர் அமைப்பை உண்டாக்குவது மிகச் சிறந்த வழியாகும்."

"கருநாடகம் வேகமாகத் தொழில் வளர்ச்சியடையச் செய்ய எதுவும் செய்யப்படவில்லை" [illegible] கருநாடக மக்களுக்கு [illegible] இருந்து வருகிறது. [illegible] நியாயமான காரண[illegible]கிறது என[illegible]லாம்; புது[illegible] இதைப் புறக்கணிக்குமானால், அதற்குத் தீ[illegible]காய் முடியும்.

ரூ. 30 கோடி செலவில் கேரளத்தில் புதிய தொழிற்சாலை

தொழிலதிபர் பிர்லா அனுமதி கோருகிறார்

"இந்தியாவின் பிரபல தொழிலதிபரான பிர்லா, ரூ. 30 கோடி செலவில் ஒரு தொழிற்சாலையை கேரளத்தில் அமைக்க அனுமதி கோரியிருக்கிறார்"

என, கேரளத் தொழில் அமைச்சர் டி. வி தாமஸ் கூறினர்.

கேரளத்தில் ஏராளமாகக் கிடைக்கும் கனிப் பொருள் கலந்த மணலைப் பயன்படுத்தி, அலுமினியத்தைவிடக் கனம் குறைந்த ஒரு பொருளை இத்தொழிற்சாலை உற்பத்தி செய்யும்; விமானம் போன்றவற்றிற்கு இது மிகவும் பயன்படும்; உலகச் சந்தையில் அதிகமாக விரும்பப்படும் ஒரு பொருளாகும் இது!

இத்தொழிற்சாலை அமைக்கப்படுமானால், ஏராளமான வர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

"மணலை எடு[illegible] பயன்படுத்துவதற்கு மட்டும் ஆ[illegible]யிரத்திற்கு மேற்பட்டோர் தேவைப்படுவர் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது" எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

உத்தரப் பிரதேசத்திலும் பஞ்சப் பகுதி!

லக்னோ, ஏப். 15—

உத்தரப்பிரதேச அரசு, மீர்ஜாபூர் பகுதியை, பஞ்சப் பகுதியாகப் பிரகடனம் செய்யும். மே 15-ல் நடைபெறும் சட்டமன்றக் கூட்டத்தில் இச்சிக்கல் விவாதிக்கப்படும்.

பிர்லா-நம்பூதிரிபாடு சந்திப்பு

கம்யூனிஸ்டுகள் அதிர்ச்சி

எப். 12-ல் கேரள முதலமைச்சர் நம்பூதிரிபாடு, தொழிலதிபர் பிர்லாவைச் சந்தித்தார். இந்நிகழ்ச்சியால் கம்யூனிஸ்டுகள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

"மாநிலங்களவையில் பிர்லா நிறுவனங்களின் ஊழல்பற்றிய ஹசாரி குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப்படும் நேரத்தில் நடைபெற்ற இச்சந்திப்பு விரும்பத்தக்கதல்ல" என்று அவர்கள் கருதுகின்றனர்.

1957-ல் கேரளத்தில் நம்பூதிரிபாடு அமைச்சரவை ரேயான் தொழிற்சாலை ஏற்படுத்த பிர்லாவுக்கு அனுமதி வழங்கிய செயல் கம்யூனிஸ்டுகளிடையே சந்தேகத்தை வளர்த்துள்ளது; இச்சிக்கல் கட்சியின் செயற்குழுவில் எழுப்பப்படும்.

‘தாழ்த்தப்பட்டோர்’ என்ற நிலை மாற்றப்பட்டாக வேண்டும்

கட்டிடத்திற்குச் செங்கல்போல் வாழ்க்கைக்குப் படிப்பும் திறமையும் தேவை

இந்தச் சமுதாயத்திற்குரிய சலுகைகளை வழங்குவதில்யாருக்கும்பின்வாங்கமாட்டோம்

அம்பேத்கார் பிறந்தநாள் விழாவில் முதலமைச்சர் அண்ணா அறிவிப்பு

சென்னை, ஏப். 15—

“எவ்வளவோ துன்பங்களுக்கிடையே தள்ளப்பட்டபோதிலும்—எண்ணுதற்கரிய இன்னல்கள் பலவற்றை அம்பேத்கார் தாங்க வேண்டிய நிலை இருந்தபோதிலும்—தமது துறையிலே பாராட்டத்தகும் வகையில் திறமை பெற்றிருந்தார்; ‘உயர்ந்த சாதிக்காரர்கள்’ என்று சொல்லிக்கொண்டவர்கள் கூட, அம்பேத்காரைப் பாராட்டினார்கள். தமக்கே உரிய சட்டத் திறமையினால் அவர் தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்திக்கொண்டார்.

“உலகம் என்றும், திறமைக்கு மதிப்பளிக்கும். எத்தனையோ பேர் பிறக்கின்றார்கள்—இறக்கின்றார்கள்; அம்பேத்காரின் 76-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றோம் என்றால், ‘எத்தனையோ அழுத்தல்களுக்கிடையே—எவ்வளவோ கொடுமைகளுக்கிடையே அம்பேத்கார் திறமையைப் பயன்படுத்தியதால்தான்; அந்தத் திறமையை அவர், தமது சொந்தத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை; தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை உயர்த்திவிடுவதற்காகப் பயன்படுத்தினார்; அதனால்தான் அவரைப் பாராட்டுகின்றோம்.

“ஆகவே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்—பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்—நல்ல திறமை பெற முயலவேண்டும். பிறப்பின் அடிப்படையிலே சலுகைகள் பெறுவதைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். கல்வித் துறையில் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றம் காணவேண்டும்.

“நாட்டில் முன்னுக்கு வர நாம் அனைவரும் படிக்க வேண்டாமா? உலகத்தைத் தெரிந்துகொள்ள வேண்டாமா?

“இங்கு பேசிய ஒருநண்பர், ‘எதை எதை எப்போது சொல்ல வேண்டும்? யார் யாரிடம் எப்படி எப்படிச் சொல்லவேண்டும்?’ என்று தெரிந்துகொண்டு, இந்த மேடையில், ‘பள்ளியில் சேருவதற்கும் வேலை பெறுவதற்கும் படிப்பு, தேர்ச்சி தேவையில்லை’ என்று கூறினார். அவர் அப்படிப் பேசியது கூட, அவருடைய பேச்சுத் திறமையையே வெளிப்படுத்துவதாகும்.

“திறமை பெறாமல், பிறப்பின் அடிப்படையில் எத்தனைக் காலத்திற்கு வளர்ந்துவிட முடியும்? ஆகவே, ‘தாழ்த்தப்பட்டோர்’ என்ற நிலை மாற வேண்டும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் திறமை பெற்றாக வேண்டும்.

“பள்ளிகளில் குறியீடு பெறுவதே ஒரு கலையாக இப்போது வளர்ந்து வருகிறது! ‘அந்தக் கலையில் நாமும் சிறந்து விளங்க வேண்டும்.

“படிப்பே இல்லாமல் திறமை பெற முடியாது. அப்படி யாராவது இருந்தால் விதிவிலக்காக ஓரிருவர் இருக்கலாம். ஆனால், ‘படித்ததனால் திறமை போய்விட்டது’ என்று யாரும் சொல்லமாட்டார்கள்!

“கட்டிடத்திற்குச் செங்கல்போல், வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் படிப்புத் தேவை; திறமை தேவை; தேர்ச்சி தேவை; இருந்த போதிலும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு என்னென்ன உதவிகள்—சலுகைகள் கொடுக்க வேண்டுமோ அந்தச் சலுகைகள் எல்லாம் உறுதியாகக் கிடைக்குமென்று சொல்லிக் கொள்வதோடு, கழகத்தின் சார்பில் எந்தெந்த உதவி செய்ய முடியுமோ அந்த உதவிகளைச் செய்ய வேறு யாருக்கும் நாங்கள் பின்வாங்கியவர்கள் அல்லர் என்பதையும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கின்றேன்”

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்ற அம்பேத்கார் பிறந்த நாள் விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

விழாவிற்கு திரு. எல். இளையபெருமாள் தலைமை வகித்தார்.

தோழர் பி. சிவசங்கரன் எம். பி. வரவேற்புரை நிகழ்த்தினார்.

தோழர்கள் கே. பாலதண்டாயுதம், ஆரியசங்காரன், ஜி. குசேலர் எம். பி., மணிமேகலை ஆகியோர் பேசினர்.

அமைச்சர் சத்தியவாணிமுத்து

தாழ்த்தப்பட்டோர் நலத் துறை [illegible]

“காங்கிரசார் காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக என்று தனி அமைச்சர் இல்லாத நிலை இருந்தது; உள்துறை அமைச்சர்தான், அரிசனத் துறையையும் சேர்த்துப் பார்த்துக் கொண்டார். இப்போது, அரிசன நலத்திற்காகத் தனி அமைச்சராக என்னை நியமித்துள்ளனர். தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் தி. மு. கழகம் எவ்வளவு தனி அக்கறை காட்டுகிறது என்பது தெரிய வரும்”

முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“டாக்டர் அம்பேத்காரின் பிறந்த நாளை, அவர் இல்லாத இந்த நேரத்தில் கொண்டாடுகின்றோமே என்பது வருத்தம் தரக்கூடியதாகும்.

உயிரோடு இருந்த காலத்தில் அரிய கருத்துக்களைத் தந்து, செயலாற்ற வேண்டிய வழிமுறைகளை வகுத்துக் கொடுத்த டாக்டர் அம்பேத்கார்—‘உயர்ந்தவர்கள்’ என்று சொல்லிக்கொண்டோரால் கொடுமைகளுக்கெல்லாம் ஆளாகி, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் அல்லல் நீக்கப் பாடுபட்ட அந்த மேதை—யாரும் எதிர்பாராதவகையில் மறைந்தார்.

இப்போது நாம் மகிழ்ச்சிக்காக இவ்விழாவைக் கொண்டாடவில்லை; தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை முன்னுக்குக் கொண்டுவர அவர் எந்த அளவுக்கும் பாடுபட்டார்—இந்தச் சமுதாயத்தை வளர்க்க அவர் என்னென்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டார்—என்பதைத் தெரிந்துகொள்வதற்கும், அவருடைய கருத்துக்களைக் கடைபிடித்துச் சமுதாய முன்னேற்றத்திற்கும் பாடுபடுவதற்கு உறுதி எடுத்துக்கொள்வதற்காகவும்தான் இந்த விழாவைக் கொண்டாடுகின்றோம்.

இன்றும் சமுதாய ஏற்றத் தாழ்வு கொடுமை இருந்தபோதிலும், நமது உரிமையை நிலைநாட்டிக்கொள்ள பல வசதிகளைப் பெற்றிருக்கின்றோம்—சட்டத்திலே அதற்கு வழிவகைகள் இருக்கின்றன. ஆனால், இதுபோன்ற வசதி ஏதும் இல்லாத காலத்தில்—சட்டத்தின் உரிமை நிலைநாட்டப்படாத நேரத்தில் பிறந்தவர் டாக்டர் அம்பேத்கார்.

தாழ்த்தப்பட்ட மக்களைத் தாழ்த்திக்கொண்டே இருக்க வேண்டும் என்ற சமுதாயக் கருத்து நிலவிக்கொண்டிருந்த காலத்தில்தான்—‘தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்த்தப்பட வேண்டுமா?’ என்ற கேள்விக் குறி உலவிய காலத்திலேதான், அம்பேத்கார், இந்தச் சமுதாய முன்னேற்றத்திற்கும் பாடுபட்டது, ஒருவகையில் வியப்பளிக்கத்தக்கூடியதாகும்.

இப்போது, உரிமைகள் அனைத்தையும் காப்பாற்றிக்கொள்ள வழிமுறைகள் உள்ள காலம். எல்லோருக்கும் உரிமை உண்டு—அதைப் பாதுகாக்க வழியுண்டு என்பதால், யாரும் யாருடைய உரிமையையும் வெளிப்படையாகப் பறிக்கமுடியாது!

‘வெளிப்படையாகப் பறிக்க முடியாது’ என்று சொன்னேனே தவிர, ‘பறிக்க முடியாது’ என்று கூறவில்லை; அதாவது, ‘மக்களின் ஒரு சிலரின் உரிமைகள் மறைமுகமாகப் பறிக்கப்படுகிறது’ என்பதைக் குறிப்பிடவே அப்படிக் கூறினேன்.

மாணவராக இருந்த காலத்திலும், வழக்கறிஞர் தொழில் புரிந்த காலத்திலும் எவ்வளவோ இன்னல்களுக்கு ஆளானபோதும்—இடையூறுகளில் சிக்கித் தத்தளித்த போதும் டாக்டர் அம்பேத்கார், தம்மைப்பற்றிக் கவலைப்படாமல் மற்றவர்களுக்காகவே வாழ்ந்தார்!

இங்கிலாந்து நாடு சென்று அவர் கல்வி பயின்றார்; கல்வி பயின்றதும் இந்தியாவுக்குத் திரும்பும்போது, அறிஞர்கள் பலர் அவரை வழியனுப்பிவைத்தனர்.

இந்தியாவுக்கு வந்த அம்பேத்கார், வழக்கறிஞர் தொழில் நடத்த வேண்டும் என்றெண்ணி, நல்ல ஒரு நெடுஞ்சாலையில் வீடு தேடினார்; நெடுஞ்சாலையில் மட்டுமல்ல — குறுக்குச் சாலையில்கூட அவருக்கு வீடு கிடைக்கவில்லை! அந்த அளவுக்கு, வழக்கறிஞராக இருந்த அம்பேத்கார் கொடுமைப்படுத்தப்பட்டார்!

இப்போது அந்தக் கொடுமைகளைச் செய்யமுடியாது! இருந்தாலும் சட்டத்தின் கண்களை மறைத்துக்கொண்டு அந்தக் கொடுமைகளைச் செய்யக் கூடும்!

இப்படி, ‘உயர்ந்தோர்’என்று சொல்லிக் கொண்டோரால் அழுத்தி வைக்கப்பட்ட சமுதாயத்தை, நமது காலத்திலாவது உயர்த்திவிடுவதற்கு நாம் கடமைப்பட்டவர்களாவோம். அதற்காகச் செய்யவேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்வோம் என்று உறுதியளிக்கின்றேன்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைப் பற்றி—பிற்பட்ட வகுப்பினரைப் பற்றி ஒருவர் சொல்லி நான் புரிந்துகொள்ள வேண்டும் என்பதில்லை. நான் படித்ததுகூட பிற்பட்ட வகுப்பினருக்குரிய சலுகைகளைப் பெற்றுத்தான்!

இரண்டுதடவை எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் தவறிப்போய், அதன் பிறகுதான் தேர்ச்சிபெற்றேன்.

கல்லூரியில் படிக்கும் அளவுக்குச் செல்ல இயலாத நிலையில் இருந்ததால், எங்கள் ஊரிலே எழுத்தனாகக் கொஞ்ச காலம் நான் பணிபுரிய நேர்ந்தது.

நான் முற்போக்கு இனத்தைச் சேர்ந்தவனாக இருந்திருந்தால், நான் கல்லூரிக்கு சென்றிருக்க முடியாது—கல்லூரிப் படிப்புப் பெற்றிருக்க முடியாது.

நாங்கள், தாழ்த்தப்பட்ட மக்களின் குறைகளை அறிந்தவர்கள்—பிற்பட்ட சமுதாயத்தின் குறைகளை உள்ளத்தால் உணர்ந்தவர்கள்.

சமுதாயத்தில் இந்த ஏற்றத் தாழ்வுப் பிணி அகலவேண்டும் என்பதற்காகச் சமுதாயச் சீர்திருத்தப் பிரசாரம் செய்தகாலத்தில் ஊர்மக்களின் கோபதாபங்களுக்கு ஆளானவர்கள்! தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டியவர்கள்!

தாழ்த்தப்பட்ட மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்; எல்லாக் கட்சிகளின் அனுதாபத்தையும் பெறவேண்டும்.

எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், கட்சி மனமாச்சரியம் இன்றி இத்தொண்டில் ஈடுபட வேண்டும்.

பிற்பட்ட சமுதாயத்தை—நாம் எல்லோரும் சேர்ந்து தூக்கிவிட்டாலன்றி, அழுத்தி வைக்கப்பட்ட நிலையிலிருந்து அதனை உயர்த்த முடியாது!

ஒவ்வொரு மட்டத்திலும் இந்தச் சமுதாயம் அழுத்தி வைக்கப்பட்டுள்ளது. சமுதாயத்தின் எல்லாப் பிரிவுகளினாலும்—பொருளாதாரத்தினாலும்—மதத்தினாலும்—வருணாச்சிரமக் கொடுமையினாலும் மிதிபட்ட பகுதி மக்கள்—தாழ்த்தப்பட்ட மக்கள் அழுத்தப்பட்டு வந்துள்ளார்கள்!

ஆகவே, எல்லாத் துறைகளிலிருந்தும் தாழ்த்தப்பட்ட மக்களை உயர்த்திவிட உதவி செய்தாக வேண்டும்.

இந்த உதவியைச் செய்யும்போது, ‘இதைச் செய்கின்றேன்; என்ன தருகின்றாய்?’ என்று பேரம் பேசக்கூடாது; பேரம் செய்யாமல் உதவி செய்யவேண்டும்.

‘பிறர் உதவி செய்யவேண்டும்’ என்பதையே நம்பிக் கொண்டு, பிறப்பின் அடிப்படையிலேயே நம் மக்கள், உதவியை எந்த நாளும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது. நாமும் திறமை பெற்றாக வேண்டும்—தேர்ச்சி பெற்றாக வேண்டும்.

இங்கே தலைமைவகிக்கும் நம் இளையபெருமாள் படிக்காமல் இருந்திருந்தால், ‘நம் இளையபெருமாள்’ என்று கூறவேனு? எத்தனையோ இளையபெருமாள்களுடன் இவரும் ஒருவராகி இருந்திருப்பார். எனவே படிப்பும் திறமையும் ஒவ்வொருவருக்கும் தேவை.

இந்தச் சமுதாய மக்களுக்குப் படிப்பூட்டவும், வாணிகத்தில் முன்னேறவும் வாழ்க்கையில் உயரவும் எந்தெந்த வகையில் என்னென்ன உதவிகள் செய்யவேண்டுமோ அந்தந்த உதவிகள் அனைத்தும் உறுதியாக உங்களுக்குக் கிடைக்கும்.

படிப்புத் துறையில் 16 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்டது. 9 சதவீத மக்கள்தாம் கல்வி பயில முன்னுக்கு வந்தனர்; இந்தச் சமுதாய மக்கள் பொருளாதாரத் துறையில் மிகவும் பின்னடைந்து உள்ளதே இதற்குக் காரணமாகும். ஆகவே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை மற்ற ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும்.”

திரு—திருமதி—செல்வி

இனி தமிழக அரசாங்கம், ‘ஸ்ரீ’, ‘ஸ்ரீமதி’, ‘குமாரி’ என்ற சொற்களுக்குப் பதில், முறையே ‘திரு’, ‘திருமதி’, ‘செல்வி’ என்னும் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்தும்.

“இப்படித் தமிழக அரசு செய்ததால், மற்றவர்களின் மனத்தைப் புரிந்துகொள்ளாமல் எல்லாவற்றையும் அடியோடு உடனடியாக மாற்ற வேண்டும் என்ற முடிவுக்கு வருவோம் என்று யாரும் அஞ்சத் தேவையில்லை!

“தமிழ் கொலுவீற்றிருக்க வேண்டிய எல்லாப் பணிகளையும், நாம் தொடர்ந்து செய்வோம்.”

கல்வியமைச்சர்
இரா. நெடுஞ்செழியன்
(தலைமைச் செயலகம் ஒளிப் பெயர்ப் பலகைத் திறப்பு விழாவில்)

இதுதான் புதிய அரசாங்கம்!

“நம்முடைய புதிய அரசாங்கம் தாய்மொழியான தமிழ்மீது பற்றுடையது; தமிழை ஆட்சிமொழியாக்குவதில் அக்கறை உடையது.

“நம்முடைய புதிய அமைச்சர்கள் தமிழுக்கு முக்கியத்துவம் அளிப்பவர்கள்!

“நம்முடைய அமைச்சர்கள், பொதுமக்களிடம் நெருங்கிய தொடர்புடையவர்கள்!

“ஆகவே, இதுவரை பணியாற்றியதைவிட அதிகமான சிரத்தையுடன் நமது அலுவலக அதிகாரிகள், கடமையை ஆற்றவேண்டும். பொதுமக்களுக்குத் தேவையான நன்மைகளைச் செய்ய வேண்டும்.”

சி. ஏ. இராமகிருஷ்ணன்,
(ஐ.சி.எஸ்.; தமிழக அரசு தலைமைச் செயலாளர்; ‘தலைமைச் செயலகம்’ ஒளிப் [illegible] விழாவில்)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

★

18—4—67

திருவில்லிபுத்தூர்

6-வது வட்ட தி.மு.க. சார்பில் வெற்றி விழா—நன்றியறிவிப்புக் கூட்டம்; மாலை 6-30 மணிக்கு ஆராய்ச்சிபட்டித் தெருவில்; தலைவர்: க. ஆறுமுகம்; பேசுவோர்: கோவிந்தராசன் எம்.எல்.ஏ., அ. வெள்ளத்துரை எம்.எல்.ஏ., ஆண்டி எனும் குருசாமி எம்.எல்.ஏ., ஆர். கே. துரை, எஸ். டி. கொழுந்து, எம். சி. ஜெயப்பிரகாசம், த. அதிவீரபாண்டியன், க. சு. மணிமாறன்.

கீழ்க்குருணைக்குளம்

தி. மு. க. சார்பில் தி.மு.க. துவக்க விழா—வெற்றி விழாக் கூட்டம்; மாலை 7 மணிக்கு; தலைவர்: சங்கிலி அம்பலகாரர்; கொடி யேற்றுவோர்: சேவுகமூர்த்தி; பேசுவோர்: ஏ. ஆர். பெருமாள் எம்.எல்.ஏ., இராமசாமி, எம். முத்து, பால்சாமித் தேவர், சுந்தரராசு.

அமைச்சர் முத்துச்சாமி

[illegible] நிகழ்ச்சிகள்.

ஏப். 19: காலை 10 மணி: திண்டுக்கல்; நகராட்சி அலுவலகத்தைப் பார்வையிடல்; பிற்பகல் 4 மணி: பரமத்தி ஊராட்சி—ஊராட்சி ஒன்றியத்தின் சார்பில் வரவேற்பு; மாலை 5 மணி: கீழ் சாத்தம்பூர் ஊராட்சி வரவேற்பு; 5-30 மணி: கூனூர் ஊராட்சி வரவேற்பு; 6 மணி: கீரம்பூர் ஊராட்சியில் வரவேற்பு; 6-30 மணி: தோட்டிபட்டி ஊராட்சி; இரவு 7 மணி: வள்ளிபுரம் ஊராட்சி வரவேற்பு; 7-30 மணி: காவெட்டிபட்டி வரவேற்பு; 8 மணி: சேந்தமங்கலம் வரவேற்பு;

ஏப். 20: முற்பகல்: நாமக்கல் தொகுதியில் சுற்றுப்பயணம்; மாலை 4 மணி: நம்மாள்வார் உயர்தரப் பாடசாலை ஆண்டு விழா; மாலை 6 மணி: சேலம் கைத்தறி பொருட்காட்சி.

யாரோ சிலர் எதை வேண்டுமானாலும் கூறட்டும்!

தமிழகத்தில் தமிழ் கோலோச்சுவதைத் தரணியோர் அறியட்டும்

‘இருபதாண்டுகள் நாடாண்டவர்கள் செய்யத் தவறியதை இன்று நாம் செய்கிறோம்’—முதலமைச்சர் அண்ணா முழக்கம்

“தமிழ் மக்களுடைய எதிர்காலம் ஒளிமயமானது. ஒளி தரத்தக்க வாழ்க்கையைத்தான் நாம் அமைப்போம்!

“மக்கள் அகத்திலும் புறத்திலும் ஒளிமயமான வாழ்வு உருவாகும்!

“நம்முடைய ஊனோடும் உயிரோடும் இரண்டறக் கலந்துவிட்ட தமிழ் மொழிக்கு உரிய ஏற்றத்தைத் தருவோம்!”

என, முதலமைச்சர் அண்ணா அவர்கள், தமிழக அரசின் தலைமைச் செயலகமாக விளங்கும் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை உச்சியில், ‘தமிழக அரசு தலைமைச் செயலகம்’ எனனும் ஒளிப் பெயர்ப் பலகையைத் திறந்து வைத்து, கூடியிருந்த இலட்சக் கணக்கான மக்களின் மகிழ்ச்சி வெள்ளத்துக்கு இடையே உரையாற்றுகையில் திட்டவட்டமாக அறிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

“இன்றையத்தினம் நான் பேச வேண்டும் என்பதில்லை; நீங்களெல்லாம் எதைக் காண வேண்டும் என்று எண்ணினீர்களோ அதைக் கண்டு, பெறவேண்டிய மகிழ்ச்சியைப் பெறுகிறீர்கள்!

‘இது தேவை’ என்று எண்ணித்தான், ‘தமிழக அரசு தலைமைச் செயலகம்’ என்ற ஒளிப் பெயர் பலகையைத் திறக்கிறோம்! விளக்கு ஏற்றிவைப்பதாகச் சொல்கிறோம்!

இந்தப் பொருளை உணர்ந்து கொள்ள முடியாதவர்கள்—இவ்வளவு நாட்கள் இதைக்கூடச் செய்யமுடியாதவர்கள் ‘வெளிச்சம்’ போடுவதாகச் சொல்கிறார்களாம்!

இருள் உள்ள இடத்தில் வெளிச்சம் போட்டால்தான், ஒளி ஏற்படும்! இருளை நீக்க ஒளி அவசியம்!

‘தமிழக அரசு தலைமைச் செயலகம்’ என்று பொறித்து வைக்கப்பட்டுள்ள புறவிளக்குகள், அகத்தில் உள்ள குறைபாடுகளை நீக்குவதாக அமையட்டும்!

ஒளி விளக்குகள்—தமிழகத்தில் தமிழ் அரசோச்சுகிறது என்பதை எடுத்துக் காட்டுவதாக அமையட்டும்!

கருத்துத் தெளிவுடையவர்கள், ‘இது அவசியம்தான்’ என்பதை உணருவார்கள். ‘இது தேவையில்லாத செயல்’ என்று நினைத்திருந்தால், பல்லாயிரக் கணக்கில் இங்கே நீங்கள் (பொதுமக்கள்) குழுமியிருப்பீர்களா? ‘இது அவசியமானதுதான்’ என்பதை, இங்கே கூடியிருக்கும் மக்கள் கூட்டமே எடுத்துக் காட்டுகிறது!

ஒளிப் பெயர்ப் பலகை அமைத்தது, ‘எங்கள் கட்சிக்குப் பெயர் வரவேண்டும்’ என்பதால் அல்ல!

‘தமிழக அரசு, தன்னைத் தானே உலகுக்கு உணர்த்திக் கொள்கிறது’ என்பதை எடுத்துக்காட்டவே இந்தப் பெயர்ப் பலகை அமைக்கப்பட்டிருக்கிறது!

நான் இளம் வயதில் இந்தப் பக்கத்தில் வரும்பொழுதெல்லாம், ‘அரசாங்க அலுவலகம்’ என்றுகூடச் சொல்லமாட்டார்கள்; ‘கோட்டை’ என்றே சொல்லுவார்கள்.

ஆனால் இப்பொழுது நிலைமை மாறிவிட்டது! தமிழ்ப் பெயரை நாம் வைப்பது, தமிழுக்கு நாம் தரும் ஏற்றத்தின் அடையாளமாகும்.

‘தமிழுக்கு ஏற்றம் தரவேண்டும்’ என்று நாம் சொல்வதெல்லாம், ‘தமிழுக்கு மட்டும் உயர்வு தரவேண்டும்; மற்ற மொழிகள் தாழ்த்தப்பட வேண்டும்’ என்ற கருத்துடன் அல்ல!

தமிழகத்திலே தமிழ் ஏற்றம் பெறுவதிலே அந்தந்த மாநிலங்களில்—அங்கே உள்ள மொழிகள் ஏற்றம் பெறுவதை இந்த அரசாங்கம் வரவேற்கிறது.

மாராட்டிர மண்டலத்திலே உள்ள அரசு, அங்கேயும் இதுபோன்று மாராட்டிர மொழியில் தனது அரசு அலுவலகத்திற்குப் பெயர் வைப்பதை இந்த அரசு மதிக்கிறது.

இங்கே பேசிய தம்பி கருணாநிதி, ‘தமிழ்நாடு’ என்ற பெயர் இலக்கியத்தில் இல்லை என்று யாரோ சிலர் சொல்லுவதாகக் கூறினார்.

யாரோ சிலர் எப்படி வேண்டுமானாலும் பேசிக்கொண்டுதான் இருப்பார்கள்!

இலக்கியத்தில் ‘தமிழ் நாடு’ என்பது இல்லையென்றுதான் வைத்துக் கொள்ளுவோம்; இப்பொழுது, ‘தமிழ் நாடு’ என்று பெயர்வைப்பது யாரு?

புதிதாகச் சுதந்தரம் அடைந்து வரும் ஆப்பிரிக்காவிலுள்ள சிறு சிறு நாடுகளுக்கு ஆங்கிலேயர்கள் வைத்த பெயர்கள் வேறு—இப்பொழுது அந்த நாடுகள் வைத்துக் கொள்ளும் பெயர்கள் வேறு—என்று அன்றாடம் ஏடுகளில் படிக்கின்றோம்!

“அந்தப் பெயர்கள் இலக்கியத்திலே இருக்கின்றனவா?” என்று யாரும் கேட்கவில்லை!

உண்மையிலேயே, தமிழ் இலக்கியத்தில், ‘தமிழ் நாடு’ என்ற பெயர் இருக்கிறது.

இங்கே அமைக்கப்பட்ட ஒளி விளக்குகளை, நீலக்கடலில் நெடுந்தொலைவிலே இருந்து கலத்திலே வருபவர்கள் காணும்தோறும், அவர்களுடைய உள்ளத்தில் பரவச உணர்ச்சியை ஏற்படுத்தியே தீரும்!

தத்தம் நாட்டுக்கு அவர்கள் சென்றவுடன், ‘தமிழ்நாட்டின் கோட்டையில் தமிழ் கொலுவிருக்கிறது’ என்று பேசி இன்புறத்தான் செய்வார்கள்!

இங்கே அமைக்கப்பட்டுள்ள ஒளி வட்டம் நம் அகத்திலே ஒளியை ஏற்படச் செய்கிறது!

நம் ஊனோடும் உயிரோடும் இரண்டறக் கலந்திருக்கும் தமிழ், எல்லா இடங்களிலும் கொலு வீற்றிருக்க வேண்டும்.

இந்த நேரத்தில் வணிகர்களைக் கேட்டுக் கொள்கிறேன்:—

‘உங்கள் வணிக நிலையங்களில் ஆங்கிலத்தில் மட்டும் பெயர்ப் பலகை இருக்கலாம்; அதை எடுத்து விடுங்கள் என்று நான் சொல்லவில்லை; ஆங்கிலத்துக்குப் பக்கத்திலோ மேலேயோ தமிழிலும் பெயரை எழுதி வையுங்கள்’’ என்று!

எல்லா இடங்களிலும் தமிழ் ஏற்றம் பெறுகிறது என்பது, ‘நமக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு’ என்பதையே காட்டுகிறது!

சமுதாயக் கொடுமைக்கு தமிழகத்தில் இடமில்லை

தீண்டாமை அனுசரிப்போர்மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கோம்!

முதலமைச்சர் அண்ணா அறிவிப்பு

“வடக்கு மாநிலம் ஒன்றில், படிப்புச் சொல்லிக் கொடுக்கும் போது தாழ்த்தப்பட்ட மக்களுக்கும்—‘உயர்வானவர்’ என்று கூறப்படும் மக்களுக்கும் இடையே முள்வேலி போட்டிருக்கும் கொடுமையை, ஒரு தடவை, இந்த தலைமைவகிக்கும் இளையபெருமாள் என்னிடம் கூறியிருக்கின்றார்.

“தெளிவாகவும் உறுதியாகவும் தெரிவித்துக்கொள்கின்றேன்—அப்படிப்பட்ட முள்வேலி தமிழகத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டால், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்குச் செய்யும் கொடுமைகள் அகற்றப்படும் என்பது மட்டுமல்ல—அதுபோன்ற கொடுமை செய்வோர் யாராக இருந்தாலும் அவர்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுப்போம்!

“இந்தச் சமுதாயத்தின் உயர்வு பழுதடையாமல் பார்த்துக்கொள்ளவும், சமுதாய உயர்வுக்கு நிறைவு செய்யவும் தமிழக அரசும், தி. மு. கழகமும் எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளும் என்று கூறிக்கொள்கிறேன்.”

—அம்பேத்கார் பிறந்த நாள் விழாவில்

திட்டங்களில் சிக்கலை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு—கட்டிடக் கலை நிபுணரை அழைத்துக் கலந்து பேசி, எவ்வளவு மலிவாக இந்தக் கட்டிடங்களை நேர்த்தியாக—உறுதியாகக் கட்டித்தர முடியும் என்பதனையும் தெரிந்துகொண்டு, பிறகு தமிழக அரசின் உதவியை நாடினால், நிச்சயம், இன்றையத் தமிழக அரசு தொழிலாளர்களின் குடியிருப்புக்கு நிதியுதவி—ஒத்துழைத்திட பின்வாங்காது என்று இந்த நேரத்தில் உறுதி கூறுகிறேன்.

இப்படிப்பட்ட குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதால் தொழிலாளர்களுக்குச் சுறுசுறுப்பும் உற்சாகமும் ஊக்கமும் தொழிலின்பால் உண்டாகிறது; அதனால் உற்பத்தி பெருகுகிறது; உற்பத்திப் பெருக்கத்தினால், முதலாளி உட்பட தொழிலாளர்களும் மேலும் நன்மை பெற வழி ஏற்படுகிறது.

ஒரு முதலாளி, ரூ. 2 இலட்சம் கொடுத்து வாங்கிய இயந்திரம் திடீரென்று கெட்டுவிட்டதாகக் கூறினாலும்—அல்லது உள்ளபடியே பல் சக்கரத்தில் உள்ள ஒரு பல் உடைபட்டு ஒரு விதமான சத்தம் வருவதைக் கண்டாலும் எப்படிப் பதைபதைத்துப் போய்—நடுநடுங்கிப் போய் அந்த இயந்திரத்தை உடனே பழுது பார்த்துச் சரி செய்வாரோ, அதே போன்று, தொழிலாளர்களில் யாராவது ஒருவர் எப்போதாவது சோர்வுற்றிருந்தாலோ—அல்லது கவலை கொண்டிருந்தாலோ—உடல் நோய்வாய்ப் பட்டிருந்தாலோ — வாழ்க்கைத் தரம் குறைந்து கொடுமைக்கு ஆளாகியிருந்தாலோ, முதலாளிகளாக இருப்பவர்கள், உடனே அத்தொழிலாளியின் குறையைப் போக்கிட முன்வருதல் வேண்டும்—துயர் களைதல் வேண்டும்.

அதேபோன்று தொழிலாளர்களும் நன்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும்.

இந்த நேச மனப்பான்மை இருவரிடையேயும் வளரவேண்டும்; அப்போதுதான் நாடு நலம் பெறும் — நாட்டு மக்களும் நலம் பெறுவார்கள்.

ஒவ்வொரு நிறுவனத்தின் முதலாளியும், தொழிலாளர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வேண்டும்.

இம்பீரியல் டுபாக்கோ கம்பெனியில் திறமைசாலிகளைத் தொழிலாளர்களாக வைத்துக் கொண்டுள்ளனர். அவர்களது உழைப்பை மதிக்கின்ற வகையிலே வீடு கட்டித் தந்துள்ளார்கள்; இதுபோன்று குடியிருப்பு அமைத்துத் தந்து ஒவ்வொரு முதலாளியும் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

மிகுந்த உடல்நலம் இல்லாமல் இருந்தும் திரு. டி. எஸ். இராமானுசம் அவர்கள், தொழிலாளர்களுக்கு அன்றுபோல் இன்றும் தன் பங்கைச் செலுத்திப் பெரிதும் உதவியிருக்கிறார்; அவர் நீண்டநாள் வாழ்ந்து மேலும் தொழிலாளர்களுக்கு வசதி ஏற்படுத்தித் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அவரது பெயராலேயே இந்தக் காலனி ‘டி.எஸ். ஆர். நகர்’ என்று அழைக்கப்படுவது பாராட்டற்குரியது.

எனவே, இப்புதுமனைகள் தோறும் என்றென்றும் இன்பம் நிலவிட—மகிழ்ச்சி பொங்கிட—தோழமை உணர்வுடன் அனைவரும் வாழ்வீராக என வாழ்த்தி விடைபெறுகிறேன்.”

காலனித் திறப்பு விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் நிகழ்ச்சியின் துவக்கத்தில் குளிர்பானமும், நிகழ்ச்சி முடிந்த பின் உணவும் அக்கம்பெனியைச் சேர்ந்த தொழிலாளர் தோழர்களால் அளிக்கப்பட்டதானது, தொழிலாளர்களின் பொறுப்பினையும் பண்பினையும் எடுத்துக்காட்டுவதாக அமைந்திருந்தது.

கூட்டத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு பல்வேறு அமைப்புக்களின் சார்பில் அளிக்கப்பட்ட ரோசா மலர் மாலைகள், மலையெனக் குவிந்து காட்சி தந்தன.

திரு. வி. நடராசன் விழாவின் முடிவில் நன்றி கூறினார்.

சிவகங்கை சேதுராசன்

நிகழ்ச்சிகள்

ஏப் 18: ஆத்தங்குடி; 19: ராஜகம்பீரம்; 20: இராமநாதபுரம்; 22: சேலம்; 23: மேட்டூர்—ஆர்.எஸ்.; 24: காட்பாடி; 25: குடியாத்தம்; 26: உசுமாத்தூர்; 28: நிரவி; 29: காரைக்கால்; 30: கும்பகோணம்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.